# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை

ஜனவரி – பெப்ரவரி 2025

ஆண்டு 5 ▲ இதழ் 04

விலை 250/-



பைந்தமிழ்ச் செம்மல்

## நிர்மலா சிவராசசிங்கம்



# எங்கு இருக்கிறதோ அந்த பறவை

அடைமழை ஓய்ந்தபின்
கூரைமேல் அடுக்கடுக்காய்
வெள்ளை மேகத்திட்டுகள்

மஞ்சளும் பழுப்பும்
பூசிக்கொள்ளும் வானம் ..
நேரெதிர் குடைப்பிடித்தவாறு
நகரும் மனிதர்கள் ..

ஒன்றன்மீது ஒன்றாக
விழும் மழைத்துளி
கசக்கிப்போட்ட காகித கப்பல்கள்
இன்னும் உலராத ஈரத்துணிகள் ..

நேற்று வீட்டிற்கு வந்த பறவை
இன்று மழையில் எங்கு
மாட்டிக்கொண்டதோ ...!

**ச. இராஜ்குமார்**


# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை
ஜனவரி – பெப்ரவரி– 2025
ஆண்டு 5 ▲ இதழ் 04

**பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா**
Chief Editor & publisher : Sithy Wafeera

**சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**
Hon. editor : Tamilnenjam Amine

**ஆசிரியர் குழு :**
Dr. ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்
மின்னத் ஸரா பரூஸ்

**வடிவமைப்பு:**
Omardeen Aysha Shakeela

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
email :
muththamizh.kalasam@gmail.com

The Editor of "Muththamizh kalasam",
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த வாசகர்களே வணக்கம்! (அஸ்ஸலாமு அலைக்கும்!)

ஏராளமான எதிர்பார்ப்புகளுடன் புத்தம் புதியதோர் ஆங்கில ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறோம்.

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும். முதலில் நம் தேகா ரோக்கியத்துக்கான வழிமுறைகளைப் பின்பற்றியவாறே இயற்கையின் நலம் பற்றியும் சிந்திப்போம். மனிதர்களின் முரணான வாழ்வியல் தான் இயற்கையையே தடம்புரள வைத்து ஏராளமான உயிரிழப்புகளுக்கும், சேதங்களுக்கும் காரணமாகி மன உளைச்சல்களுக்கும் எம்மை ஆளாக்குகிறது. இதை நம்மில் எத்தனை பேர் சிந்தித்துப் பார்க்கிறோம்?


காடழிப்பு, மக்கிப் போகாத நெகிழிக் குப்பைகளாலும், ஆலைக்கழிவுகளாலும் பூமிக்கு விளையும் தீங்கு, காற்றில் கலக்கும் (வாகனங்கள் வெளியேற்றும்) கரும்புகை, சூழலை மாசுபடுத்தும் குப்பைகளை எரித்தல் போன்ற இன்னோரன்ன இயற்கைக்கு முரணான செயற்பாடுகளால், வளிமண்டலம் மாசடைவதுடன், பருவகாலங்களில் மாற்றங்கள், காலம் தவறிப் பெய்யும் கனமழை, உலக வெப்பமயமாதலில், கடல் மட்டத்தின் உயர்வு, மண்ணரிப்பு என்பன பேரழிவுகளை எமக்கு தந்து செல்வதை, இயற்கை அனர்த்தங்கள் எமக்கு எச்சரிக்கை செய் கின்றன. அண்மையில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கும் அழிவுகளும், இயற்கையின் செய்தியை எமக்கு எத்தி வைத்து அச்சுறுத்தலை தந்து சென்றுள்ளன. இயற்கை யைப் பாதுகாப்பதில் நமக்குப் பாரிய பங்குள்ளது என்பதை ஒவ்வொரு மனிதனும் சிந்தித்தால், இயற்கையோடு இசைந்து வாழத் தொடங்குவான். மரங்களை வெட்டுவதைத் தவிர்த்தல், மரங்களை வளர்க்க இளைய தலைமுறையினரையும் ஊககுவித்தல், குப்பைகளைத் தரம் பிரித்து உரிய முறையில் நகர சுத்தித் தொழிலாளரிடம் கையளித்தல் அல்லது அதற்குரிய இடங்களில் போடுதல், பிளாஸ்டிக் பாவனை யைக் குறைத்தல், வடிகால்களை சுத்தம் செய்தல், தமது வாகனங்களில் கரும்புகை வெளியாவதை சீர் செய்தல் போன்றவைகளால் இயற்கையின் நலனை நாம் பாரிய அளவு பேண முடியும். இதை ஒவ்வொருவரும் மனதில் இருத்தி, நம் வாழ்வியல் முறைகளில் சிறு மாற்றங்களைக் கொண்டு வந்தாலே போதும், இயற்கைப் பேரழிவுகளைப் பெருமளவில் தடுத்து விடலாம். இப்புதிய ஆண்டில் புதிய மாற்றங்களைக் கொண்டு வர சிந்திப்போம். செயற்படுத்துவோம். இயற்கையோடு ஒத்து வாழ்வோம். பிறந்திருக்கும் 2025 சகலருக்கும் சுபீட்சத்தையும், மகிழ்ச் சியையும், மனநிறைவையும் தர பிரார்த்திக்கிறேன். நன்றி

வ.ஃபிறா வ.ஃபி

(பிரதம ஆசிரியர்)

# இறை நம்பிக்கையும்

# மன மகிழ்ச்சியும்



மனிதன் நிலைத்திருப்பிற்கு மிகவும் அவசியமான ஒன்றாக மனமகிழ்ச்சி காணப்படுகின்றது. அரசன் முதல் அடிமை வரையும் அறிஞர் முதல் அறிவிலி வரையும் இந்த மன நிம்மதியைத் தான் தேடியலைகின்றனர். அற்ப கால சொற்ப வாழ்க்கையில் எத்தனையை இம் மனிதன் தேடியலைந்தாலும் அவை எல்லாவற்றுக்குமான குறிக்கோளாக மன நிம்மதி மாத்திரமே காணப்படுகின்றது.

நம்மில் பலர் ஒவ்வொருவரும் மன நிம்மதியைத் தேடி அலைந்திடும் போது எதிர்பாராமல் எண்ணற்ற கை சேதங்கள் தடைக்கல் தடுத்தாலும் அதில் சிலர் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது இன்றும் வெற்றிப் பாதையின் பக்கம் நடை போட்டுக் கொண்டு தான் இருக்கின்றார்கள். இருந்தும் தொன்று தொட்டு இன்று வரை எழுந்து வரும் கேள்விதான் மன நிம்மதி எங்கே? என்பதை பற்றி...

எனினும் அதிகமானோர் மன நிம்மதியைத்தான் தேடி அலைகின்றோம் என்றறியாமல் இன்னும் தான் ஓடி திரிகின்றனர்.

அற்ப இன்பங்கள் பலதில் குடி கொண்ட மனிதன் இறை திருப்தியை துச்சமாக கருதுகின்றான். பெரும் புயலில் அள்ளுண்டு செல்லும் பந்து போல் புயலின் பின்னேதான் அவனின் வாழ்க்கையும் நிம்மதியை தொலைத்து விட்டு பந்தாடப்படுகின்றது. மனிதன் நிம்மதியை தேடியலைந்திடும் இடங்களில் முக்கியமானதாக இன்று காணப்படுவது சடப்பொருட்கள் தான் .

அது செல்வமாகவும் உணவு

குடிபானமாகவும் வீடு வாகனங்க ளாகவும் இருக்கலாம். அவற்றை அழிய விடாமல் பாதுகாப்பதிலுமே அவனின் சொற்ப வாழ்க்கையை அந்தரத்தில் தொங்க விடுகின்றான். இவ்வாறு மனிதன் மன நிம்மதி எது வென்று தெரியாமலே மன நிம்மதி எங்கே? என்று கூவித் திரிவதிலே அவனின் ஆயுட்காலம் கரைந்து விடுகின்றது. தன்னால் பிறந்த குழந் தைகள் தன்னை பெற்றெடுத்த பெற்றோர் தனக்காக பிறந்தவர்கள் மூலம் மன நிம்மதி கிடைக்குமா என்று பார்த்தால் நிச்சயமாக கிடைக்கும். அதில் எவ்வித சந்தே கங்களும் இல்லை காரணம் அவர்கள் தான் வாழ்க்கையின் சுபீட்சமும் நிம்மதி பந்தல்களும். இவர்களினால் எப்போது நிம்மதி கிடைக்கும்? இவர்களுக்கான பொறுப்புக்களையும் கடமைகளை யும் சரிவரச் செய்து வரும் போது மன நிம்மதி அவனை அறியாமலே சூழ்ந்து கொள்ளும்.

இந்த உலகம் அற்பங்களினால் அலங்கரிக்கப்பட்டது. இந்த அற்பங் களில் தன் வாழ்நாளை வீணாக்கி விடும் மனிதன் அவனுக்காக காத் திருக்கும் ஏராளங்களை பற்றிக் கொள்வதில் ஏமாந்து விடக்கூடிய வனாக காணப்படுவான்.

எனவே தான் ‘அவனே விசு வாசிகளது இதயங்களில் விசுவா சத்தை அவர்கள் அதிகமாகிக் கொள் வதற்காக அமைதியை இறக்கி வைத்தான். (அல்ஃபத்ஹ்:04)

மனிதன் தேடியலைந்திடும் மனநிம்மதிக்கு ஒரே ஒரு விடயம் தான் காரணமாக உள்ளது. அதில் வேறு எதுவும் பங்கு போட்டிட முடியாது. அது அல்லாஹ்வின் மீதும் மறுமையின் மீதும் கொண்ட இறை விசுவாசமாகும். எந்தவித சந்தேகங்களையும் முரண்பா டுகளையும் ஏற்படுத்தாத விசுவாச மாகும். இன்று இறை நம்பிக்கை இறை விசுவாசத்தை இழந்து விட்டு எத்தனையோ மனிதர்கள் நிம்மதியின்றித் திரிகின்றனர். இவர்கள் இறைவனால் வழங்கப் பட்ட பேரருள் வாழ்க்கை பற்றி அறிந்தும் அறியாத புரிந்தும் புரியாத வர்கள்.

மானிடா!

கொஞ்சம் கேள்! நிம்மதி எங்கே என்று அங்கும் இங்கும் அலைவதை விட்டுவிட்டு உன்னால் தொலைந்த மன நிம்மதியை உனக்குள் மாத்தி ரமே தேடிக்கொள் !

அது எங்கேயும் சென்று விட வில்லை உனக்குள் மாத்திரம் தான் என்பதை மறந்து விடாதே!

அறியாமைகளால் ஆளப்படும் அற்ப உலகில் உனக்கு இருக்கும் இந்த சொற்ப வாழ்க்கையை வீணாக்கி விடாதே!..

**ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான் (இஸ்லாஹி)**

புல்மோட்டை.

# ரயிலுக்கு நேரமாச்சு..

ஆதவன் மேற்கில் சிவப்புக் கம்பளத்தை இருளிற்குள் சுருட்டிக் கொண்டிருந்தான். டிராபிக்கில் சிக்கி, மீண்டு ஒருவழியாக செகந்திராபாத் ரயில் நிலையத்தின் கார் பார்க்கிங்கில் வேகமாக நுழைந்து நின்றது மதனின் கார்..

'ஏங்க மெதுவா.. நிறுத்துங்க' என்றாள் வீணா. பெரியப்பா.. பின்சீட்டில்

'என்ன மாப்ள.. ஒன்னுமில்லையே' என்றார்..சற்றே பதட்டத்துடன்..

இறங்கும் பொழுது தான் கவனித்தாள். இடப்புறம் ஓரத்தில் தரை யோடு தரையாக அழுக்காய் மெலிந்த தேகமுடைய ஒரு பெண் குப் புறபடுத்திருந்தாள்..

'என்னங்க நல்ல வேளை.. அங்க நிறுத்தல.. பாருங்க எப்படி கிடக்கா' என்றாள் வீணா. ரயிலுக்கு நேரமாகி விட்டதால் மடமடவென லக்கேஜ்கள எடுத்துண்டு உள்ளே வந்தனர். நல்ல படியாக வழி அனுப்பிட்டு திரும்பி வந்து காரில் ஏற முற்படும் பொழுது தான் கவனித்தாள், அந்தப் பெண் கிடந்த இடத்தில் ஒரு பெரிய கார் நின்றுக் கொண்டிருந்தது. அருகில் இருவர் பேசிக்கொண்டிருந்தனர்..

ஐய்யய்யோ ஒருத்தி கீழே கிடந்தாளே. இருக்காளாயென பதட்டத்துடன் இருட்டான இடத்தில் கீழே குனிந்து பார்த்ததில் குப்பென வியர்த்து விட்டது. எந்தச் சலனமும் இல்லாமல் அப்படியே கிடந்தாள். அவள் கால்கள் மட்டுமே தெரிந்தன..

பேசிக் கொண்டிருப்பவர்களிடம் 'இது உங்க காரா.. கீழ ஒருத்தி கிடக்கா பார்க்கலயா' என்றாள் வீணா.

'அடடா.. கவனிக்கலயே மா' என்றவாரே கீழே குனிந்து பார்த்துவிட்டு மெதுவாக காரை பின்னால் எடுத்தனர். நல்ல வேளை தலையில் சக்கரம் படவில்லை. இரு சக்கரங்களுக்கிடையில் இருந்தாள். 'நேரமாச்சு. டிராபிக் அதிகமாயிடும்.. வா' ன்னு மதன் அவசரப்படுத்த வேறு வழியில்லாமல் காரில் ஏறினாள்..



கார் பார்க்கிங்கில் பணம் வாங்குபவ னிடம் 'ஏங்க அங்க ஒருத்தி நினைவில்லாம படுத்திருக்கிறாள். வெளிச்சம் குறைவாயி ருக்கு. வண்டிகள் வந்து நிக்குது. என்ன வென்று பாருங்கள்' என்றாள் வீணா..

*'தினம் இதே பொழப்பா போச்சு.. இங்க வந்து படுத்து என் உயிரை வாங்குதுங்க' என்றான் படுஅலட்சியமாக.. வண்டி அதற்குள் டிராபிக்கில் மாட்டிக் கொண்டிருந்தது..*

*வீணா மனசெல்லாம் அந்தப் பெண்ணை நினைத்தே இருந்தது.. யாரிவள்.. ஏன் இங்கு கிடக்கிறாள்.. அவள் உயிருடன் தான் இருக்கிறாளா.. பார்க்கிங் ஊழியர் சென்று பார்ப்பாரா.. எத்தனை கேட்பாரற்ற அநாதைகள் வீதிகளில்.. எண்ணியவாறே.. திரும்பி பார்க்க நேரமில்லாத மனிதக் கூட்டத்தில் அவளும் கரைந்திருந்தாள்.. கார் நிறுத்த பணம் வாங்குபவர்கள் இரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்களில்.. இருளில் விழுந்து கிடப்பவர்களை கவனிக்க வேண்டாமா..?!*

*மனம் கனத்தது..*

**சாரதா சந்தோஷ் – ஐதராபாத்**

# அன்புசூழ் இதயம்

புதுவை ஆதிரா

பச்சை இலை வண்ணத்தில் ஒளிந்திருக்கும்
மருதாணிச் சிவப்பாய் மனம் முழுதும் உன் நினைவு
உருகிநின்று கனக்கிறது!

நீ ஏற்றிச் சென்ற தீபத்தின் அணையாத சுடரில் எரியும்
எனதன்பு ஒளியாகிறது! நிற்காமல் ஓடும் ஆறு
நீரோடு சேர்த்து இழுத்துச் செல்லும் மலர்களின்
மணம் செல்லாமல் என்னைச் சுற்றி
கமழ்ந்து கொண்டிருக்கிறது!

அதீத அன்பில் கனமழை தாங்காமல்
நனைந்து சிலிர்க்கும் சிறு குருவியின் நடுக்கமாய்
இன்று ஓசையில்லாத பொழுதுகளாக நகர்கிறது!

வானத்தின் வெறுமையை பகல் கண்டுகொள்ளாது
கடந்து விடுவது போலவே
மௌனத்தில் நிரம்பிய வார்த்தைகளை மனம்
யோசிக்காமல் ஒவ்வொரு இடத்திலும்
சேமித்துக் கொண்டே போகிறது!
அன்புசூழ் இதயத்தின்
இருப்பாக மகிழ்வே நித்தமும் உறுதியாய்..

# பாவியானதேன்

நெஞ்சிலே பொறாமைத்தீ
நினைவிலும் நின்றெரிய
கொஞ்சிடுமன்பு தேக்கி
குழைந்து நற்பரிவு காட்டி
அஞ்சிடவைக்குஞ்செயலால்
அடுத்தவரோடு சேர்ந்து
நஞ்சினை விதைக்கும் நீயோ
நல்லவன் போர்வைக்குள்ளே

வார்தையிலழகு சொற்கள்
வினயமாய்ப்பழகி வந்து
பார்வையில் பலரைச்சேர்த்து
பதுங்கியே குழிபறிக்க
போர்வையிலறிஞனாகிப்
புன்னகை காட்டுகின்ற
ஆர்வமேன் தீயமனிதா
அநீதியை விதைப்பதென்ன?

இறையவன் பணிகள் தன்னை
இதய நிறைவுடன் செய்தும்
குறை பல கொண்டோனாக
குணத்தவன் மனங்கெடுத்து
நிறையிலாதோனை நன்மை
நல்லவனென்று சாற்றி
கறைமனம் பூண்டலைந்தே
கரியினைப்பூசுகின்றாய்

உத்தமனென்று பலரின்
உடையதனழகாலிங்கு
சத்தியவானாயெங்கும்
காட்சியாய் நின்றிடாதே
இத்தரைமீது மண்ணில்
போலிகள் புகழுக்காக
நித்தமும் ஜொலிப்பார் தீமை
நினைக்கிறாரும்மைப்போல

என்னதான் சதிகள் செய்தும்
எத்தனை பகை விதைத்தும்
நன்மையோனிறையவனின்
நாட்டமேயில்லையானால்
புன்மையுன் செயலனைத்தும்
புரியுமுன் தலையிற்சூழும்
அன்பனானிறையின் காவல்
அடியவர் நல்லோர்க்கிட்டும்

கலாபூஷணம்

**மருதூர் ஜமால்தீன்**



# பொங்கிடு மனமே

பொங்கிடு மனமே
பொறுமை ஏனோ.
ஏனெனும் கேள்வியை
மறந்து விடலாமோ.

வினாக்களில் எழுந்ததே
பகுத்தறிவு ஆகும்.
ஆகவே மனதிலே
கேள்விகள் கேட்டிடு.

கேள்விகள் வழியேதான்
வேள்வியும் வளரும்.
வளரவே உனைத்தேடி
தோல்விகள் வரனும்.

வருவது அனுபவம்
அப்படியே எடுத்திடு.
எடுத்ததைக் கொண்டு நீ
படிகளை அமைத்திடு.

அமைதியை மட்டும்
கடைப் பிடித்திடு.
பிடித்தது நழுவினால்
கிடைப்பது பெரியதா

பெரியவர் சொன்ன
அறிவுரை நினைத்திடு.
நினைப்பதை நடத்திட
நிமிடத்தில் உழைத்திடு.

உழைப்பவனுக்கே இந்த
உலகம் உரியது.
உரிமையை இழந்திட்டால்
உயிரிருந்து பயனில்லை.

பயன்படுத்திடு மூளையை
அழித்திட வழியில்லை.
வழியின்றி நடக்கையில்
வலிப்பது இயல்புதான்.

இயல்பிலே இருந்திட்டால்
வலியில்லை உண்மைதான்.
உண்மைக்கு மட்டுமே
உருவங்கள் உண்டிங்கு.

உண்டென காட்டுவார்
உண்மையை மாற்றுவார்
மற்றதை புரிந்திட்டால்
உன்னை நிலைநாட்டலாம்.

**கோ. தனுசன்.**
மட்டக்களப்பு, இலங்கை.

# வார்த்தையின் வலி(மை)

என்னைக் காயப்படுத்திய உன்
வார்த்தைகள் ஒவ்வொன்றையும்
முத்தாய் எண்ணி
சொத்தாய் நானும்
மாலையாய் கோர்த்து
வைத்துள்ளேன்
நாளை ஒருநாள் உனக்கு
அணிவிக்கையில்
நீ மாண்டு விடுவாய்
மீண்டும் எழாதபடி

**கதீஜா ஜனூன் அன்சார்**
(திருமலை கதீஜா)

# ஃபெங்கலின் பொங்கல்



கடலின் ஆழத்தில்
தாழ்ந்து - நீ கிடப்பதால்
தாழமுக்கம் என்று
இந்த மானிடர்
உனக்கு பெயரிட்டதால்
என்னவோ…!
எங்களை அடிக்கடி
தாழ்த்து விட்டு செல்கிறாய்.

கடலுக்குள் நீ கொந்தளிக்கிறாய்
புயலாய் எழுந்து
நிலத்தையெல்லாம்
புரட்டி விடுகிறாய்
நொடியில் அத்தனையும்
நொறுங்கி நிர்க்கதியாகி
நீரில் நீந்துகிறோம்.

நீ கடலுக்குள்
கருக்கட்டிய உடன்
உனக்கு பெயர் சூட்டி மகிழ
பல நாடுகள் சபை ஏறுகின்றன.
உன் பெயர்
எங்கள் செவிகளுக்குள்
சரியாக விழ முன்பே
புயலாய் வந்த நீயோ
காற்றாய் பறந்து
சென்று விட்டாய்.

ஃபெங்கலா இல்லை
பென்சலா என பெயரை உறுதிப்படுத்திக்
கொள்ள முன்
பிஞ்சு உயிர்கள் பலதை
பறித்து விட்டு தீவையே விட்டு
ஓடி விட்டாய்.
எல்லாம் சிதைந்து
சின்னா பின்னமாகிக்
கிடக்கிறோம்.

அன்பு ஃபெங்கலே….
எங்கள் கண்ணீர்
உனக்கு தெரிய நியாயமில்லை
நீ பொழிந்த
மழை வெள்ளத்துடன்
அல்லவா… அது
கலந்து விட்டது.
ஃபெங்கல் தாயே
எதிர் நீச்சலடிக்கும்
எம் துயரப் பயணத்தில்
நீ ஏஞ்சலாய் உருவெடுத்திடு.
உன் ஆடுகளமாகிய
எம் பூமியில்
அமைதித் தென்றலாய் வீசிடு.
எம் உயிர் காக்கும்
பயிர்களை சாய்க்கும்
கோர நகங்களை
வருடிச் செல்லும்
பொன் விரல்களாக்கிடு.
அப்போது நீ
எத்தனை முறை
தாழமுக்கமாய் தலையெடுத்தாலும்
தவழ்ந்து வரும் உன்னை
நாம் வெறுக்க மாட்டோம்.
உன் வரவிற்காய்
மாலையுடன் காத்திருப்போம்.

இப்படிக்கு
நப்பாசை மானிடன்.

**றஹீமா இன்ஸார்**
மீராவோடை



-(சிறுகதை)-

# ஜஸ்

வெள்ளிக்கிழமை காலை வேளை கடிகாரத்தைப் பார்த்தேன். நேரம் 10.45 ஐ காட்டிக் கொண்டிருந்தது. அப்போது கிணு கிணுத்த போனில் வந்த செய்தி ஒரு கணம் என்னை அலறியடிக்கச் செய்தது. கண்கள் இருண்டு வெட்ட வெளிச்சமாய்த் தெரிகின்ற வானத்தின் பளிச்சிடு கையிலும் இருண்மை சூழ்ந்து கொண்டிருந்தது.

'ஹலோ தம்பி, எங்கே இருக்கிறாய் நீ' என்ற எனது சகோதரனின் கேள்விக்கு சாதாரணமாக பதில் சொன்னேன்.

நான் என்னதான் சாதாரணமாக பதில் சொன்னாலும் கூட, அவனது குரலில் மெல்லிய தடுமாற்றம் நிலைகொண்டிருந்ததை என்னால் ஊகிக்க முடிந்தது. ஏதோ சிக்கல் இருப்பதாக மனதில் தோன்றியது. என்னவென்று கேட்பதற்குள்,

நீ அவசரமாக வீட்டுக்கு வா. நானும் மதினியும் அங்குதான் வந்து கொண்டிருக்கிறோம்' என்று சொல்லி அழைப்பை துண்டித்தான். அவனாகவே போன் செய்து பதற்றத்தை எனக்குள்ளும் கிளப்பி விட்டு அவன் விலகி விட்டான். என்ன நடந்தது, என்ன நடந்தது என்று இந்தப் பதற்றம் ஒரே வினாவை மாறி மாறி எழுப்பிக் கொண்டே இருந்தது. நண்பர்களோடு உறவாடிக் கொண்டு பாதி சாப்பிட்ட கிழங்கு பொரியலை அப்படியே வைத்து அறைகுறையாய் கையை கழுவி விட்டு அவசரமாக வீட்டுக்குச் செல்கிறேன். பதினைந்து நிமிடத்தில் வருகிறேன் என்று பொய்யான நேரத்தை சொல்லி விட்டு அவசரமாக கிளம்பினேன்.

வீதியில் பள்ளங்களும் வாகன நெரிசல்களும் நிரம்பியிருந்தன. அவ்வளவு பதற்றத்துக்கு மத்தியிலும் வீதியில் பயணிக்கின்ற போது படிக்காதவன் படத்தில் ஒரு கூட்டுக் கிளியாக பாடலில் வருகின்ற 'செல்லும் வழியெங்கெங்கும் பள்ளம் வரலாம். உள்ளம் எதிர்பாராமல் வெள்ளம்

வரலாம்' என்ற மலேஷியா வாசுதேவன் பாடிய பாடல் வரிகள் ஞாபகத்துக்கு வந்தன. உடலில் ஹார்மோன்கள் சுரந்தன. வியர்வை வேகமாக உடலை நனைத்தது. வேர்த்து விறுவிறுத்தவனாய் வீட்டுக்குள் நுழைந்தேன்.

எனது மனைவி வீட்டின் கதவருகே நின்று கொண்டிருந்தாள். எனது தோற்றத்தை கண்டு 'ஏன் இப்படி விறுவிறுக்க வாரிங்க' என்ன நடந்தது என்று கேட்டாள். கைச்சட்டையால் நெற்றியைத் துடைத்தேன்.

அவளுடைய கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை.

'தெரியாது. நாநா கோல் பண்ணி அவசரமாக வீட்டுக்கு வரச் சொன்னார். அவரும் வாராராம்.

'மாமிக்கு எதுவும் பிரச்சினையோ தெரியாது. சுகமில்லாம இருக்கப் போகுது. நேற்றும் நெஞ்சுக்குள்ள ஒரு மாதிரி இருக்கு என்று சொன்னாங்க. நீங்க என்ன ஏதுன்னு நல்லாக் கேட்டிங்களா?'

'இல்லை'

'இல்லையா. என்ன சொல்றீங்க. என்ன பதில் இது?'

'அவன் போன் பண்ணி வா என்று சொல்லிட்டு போனை கட் பண்ணிட்டான். அப்புறம் எங்கே கேக்கிறது. நீ வாயை மூடிட்டு இரு. முதல்ல நாநா வரட்டும். அவன் வந்துக்கிட்டு இருக்கான். உம்மாக்கு சுகமில்லாட்டி இங்க வருவானா? விசயத்தை சொல்லி அங்க கூப்பிட்டுருப்பான்.'

உம்மாவின் நம்பரிலிருந்து கோல் வந்தது. உம்மாதான் பேசினார். என்னை நாநாவின் வீட்டுக்கு வருமாறு சொன்னார். நாநா இங்கே வருவதாக சொன்னதாக சொன்னேன். அவர் அங்குதான் இருக்கிறார் என்றும் உடனடியாக வருமாறும் சொன்னார். 'ஆளாளுக்கு மாறி மாறி ஒரு இடம் சொல்லிட்டு இருக்காங்க' என்று சலிப்பாக இருந்தது. நான் உம்மாவை பார்க்கப் புறப்பட்டேன்.

கடந்த நான்கு நாட்களாக தொடர்ந்து மழை. ஆட்டோவை எடுத்துக் கொண்டு சென்றால் சீக்கிரம் சென்று விடலாம். வீதியின் இருமருங்கிலும் கால்வாய் வெட்டப்பட்டிருந்தது. மோட்டார் சைக்கிளும் போக முடியாது என்பதால் கைக்கிளை எடுத்துக் கொண்டு அழுத்தி மிதிக்கத் தொடங்கினேன். தண்ணீர் டயர் இருந்த இரு பக்கத்திலும் விசிறியடித்தது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஒரே மழைதான். மழை பொழிவது பரவாயில்லை. யாரும் வெளியில் இறங்க முடியாத அளவுக்கு பெய்து கொண்டிருந்தால் என்ன செய்வது? விதியைத்தான் நொந்து கொள்ள வேண்டும். வீதியின் ஓரங்களில் நீர்

செல்வதற்கு ஜே.சி.பி மெஷினை வைத்து கிடங்கு கிண்டிக் கொண்டிருந்தார்கள். நிறையப் பேர் அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிலருடைய கையில் குடை இருந்தது. சிலர் தூறல் மழையில் நனைந்து கொண்டிருந்தார்கள். நான் அவசரத்தில் வந்ததால் குடையை கொண்டு வர மறந்து விட்டேன். மனைவியும் சொல்லாமல் விட்டு விட்டாள்.

ஒருவாறு வீட்டைச் சென்றடைந்தேன். உம்மா வராந்தாவில் குத்துக் கல்லாக உட்கார்ந்து கொண்டிருந்தார். உம்மாவுக்கு எந்தப் பிரச்சினையுமில்லையென மனதுக்குள் நினைத்துக் கொண்டேன். வீட்டுக்குள் சென்ற போதுதான் அவர்கள் அழுது கொண்டிருப்பது தெரிந்தது. உம்மாவோடு சேர்ந்து இரு சகோதரிகளும் அழுது கொண்டிருந்தார்கள்.

'என்னாச்சு புள்ள... ஏன் எல்லோரும் அழுதுட்டு இருக்கிங்க..?' என்று கேட்டேன்.

'மாமா.. மாமா அங்கே போய் பாருங்களேன். நியாஸ் மாமாட வீட்டுக்குள்ளே மூன்று பேர் புகுந்து கதவை பூட்டிக் கொண்டு அடிக்கிறாங்க. மாமா கத்துற சத்தம்தான் கேட்குது' என்றார்கள்.

'என்ன அடிக்கிறாங்களா?...' எனக்கு அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது. யார் அடிக்கிறார்கள்? எதுக்கு அடிக்கிறார்கள் என எதுவும் கேட்காமல் நியாஸின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

நியாஸ் வேறு யாருமில்லை. எனது கூடப் பிறந்த தம்பிதான். வீட்டைச் சுற்றி நிறையப் பேர் நின்று கொண்டிருந்தனர். அங்கு எனக்குப் பக்கத்தில் மச்சான் நின்று கொண்டிருந்தார்.

'என்ன மச்சான்... என்ன நடக்குது...'

'பொலிஸ் ஆட்கள் வந்திருக்காங்க. நியாஸைத்தான் உள்ளே பூட்டி வெச்சி அடிக்கிறாங்க. ஏன் எதுக்கு என்று ஒன்னும் சொல்றாங்களும் இல்லை.'

'காரணம் சொல்லாமல் நம்மட வீட்டுக்குள்ள வந்து எப்படி இப்படி அடிக்கிற அவங்க. வாங்க போய் என்னன்னு பார்ப்போம்.' அவர்கள் எதையும் பொருட்படுத்தாமல் திட்டி திருப்பி அனுப்புவதாக அவர் சொன்னார்.

'சரி என்னை விடுங்க. நான் போய் கேட்கிறேன்' என்றேன். உம்மா, சகோதரி என எல்லோரும் போக வேண்டாம் என தடுத்தார்கள். அதற்காக அடித்துக் கொண்டிருப்பதை பார்ப்பதா என்றும் ஒரு கேள்வி மனதுக்குள் எழுந்து கொண்டிருந்தது. என்ன நடந்தாலும் கேட்க வேண்டும் என்ற முடிவோடு வீட்டின் அருகே

சென்று கதவை பலமாக மூன்று முறை கைளால் தட்டினேன்.

ஒரு போலீஸ்காரர் வந்து கதவைத் திறந்தார். 'கௌத...?' என்று கேட்டான். சிங்களத்தில் 'கௌத' என்று கேட்டாலும் கூட அவனுக்கு நன்றாகவே தமிழ் தெரியும் என்பது எனக்குத் தெரியும். அவன் சிங்களத்தில் கேட்ட கேள்விக்கு தமிழிலேயே பதில் சொன்னேன். கிழக்கு மாகாணத்தில் உள்ளவர்களுக்கு  சிங்களம் தெரியாது என்பது தனித்துவமான பிரச்சினையாக இருந்தது.

'என்ட சகோதரன்தான் அவன். எதுக்கு அவனை  போட்டு அடிக்கிறிங்க' என்றேன்.

'வீட்டில் முக்கியமான பொருள் ஒன்றை தேடுறோம். அதுவரைக்கும் யாரும் உள்ளே வரக்கூடாது. போய் ஓரமா நில்லுங்க' என்று சொல்லி விட்டு கதவை சாத்த முற்பட்டான்.

அவனை விடாமல் 'என்ன பொருள்?' என்று கேட்டேன். எதுவும்; சொல்லாமல் அலட்சியமாக கதவை மூடினான். யார் வீட்டுக்குள் வந்து யார் அதிகாரம் செய்வது என்ற கோபம் பொத்துக் கொண்டு வந்தாலும் எதுவும் பேசாமல் எல்லோரையும் போல வெளியில் நின்று கொண்டிருந்தேன். ஒரு வேளை களவு ஏதாவது எடுத்திருப்பானோ என்றும் மனதுக்குள் தோன்றியது. சண்டித்தனம் பண்ணிக் கொண்டு திரிந்தாலும் இதுவரை இப்படி பொலிஸ் இவனை தேடி வந்ததில்லை.

மொத்தமாக மூன்று மணித்தியாலங்களைத் தின்று விட்டார்கள். கடைசியாக கதவை திறந்து அவனையும் ஒரு கையால் பிடித்துக் கொண்டு வெளியே வந்தார்கள். அவர்களுடைய கையில் ஒரு சிறிய பை, கண்ணாடித்துண்டு, லைட்டர் என்பன இருந்தது.

வெளியே வந்த போதுதான் தெரிந்தது. அடித்தது எனது தம்பிக்கு மட்டுமல்ல. அவனுடைய நண்பர்கள் இருவருக்கும் சேர்த்துத் தான். இரண்டு விலங்குகளைக் கொண்டு மூவரையும் பூட்டினான்.

எங்களைப் பார்த்து ஒரு பொலிஸ்காரன் சொன்னான். 'இது என்ன என்று தெரியுதா? ஐஸ் போதைப்பொருள். இதுக்கு அடிமையானது கூட தெரியாம இவனை வீட்ல வெச்சிருந்து இருக்கிங்க. நாட்டுல இதனால எவ்வளவு பிரச்சினை'

'சேர் அவன் பீடி, சிகரட் பிடிப்பான். மற்றப்படி எந்த கெட்ட பழக்கமும் அவனுக்கு இல்லை' என்றார்கள் அவனது குடும்பத்தினர்.

பொலிஸ்காரர் அப்படிச் சொல்லிக் கொண்டிருந்த போது 'வருஷக் கடைசிதானே. கேஸ் இல்லாததுக்கு இவங்க கேஸ் புடிக்க

பார்க்கிறாரங்க' என்று உம்மா சொன்னாங்க.

'என்னம்மா கதைக்கிறிங்க. உங்கட மகன்ட ரூம்ல இருந்து எடுத்திருக்கோம். இவன்கிட்டயே கேளுங்க. யார் கொண்டு வந்தது என்று...' என ஒரு பொலிஸ்காரர் கேட்டுக் கொண்டிருந்தார்.

தொடர்ந்து, 'அம்மா... இது வெற மாதிரி கேஸ் இல்லை ஐஸ் வச்சிருக்கார். இது பெரிய கேஸ். ஐஸ் போதைப் பொருள் இதை இங்க வெச்சிருக்க ஏலாது' என்று பொலிஸ்காரர் மேலும் விளக்கிச் சொன்னார். ஐஸ் எனும் போதைப்பொருளை வைத்திருந்த தம்பியை பொலிஸார் ஆதாரத்தோடு பிடித்துக் கொண்டு சென்றார்கள். சமூகத்தின் சாபக் கேடாக மாறியிருக்கிறார்கள் போதைப் பொருள் பாவிப்பவர் கள். இவர்களை சட்டம் இனி தூக்கி நிறுத்தி தன் தீர்ப்பை வழங்க வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறது. போதையின் இன்பம் எல்லாவற் றையும் மறைத்து விட்டது. ஒரு நொடி இன்பம் எல்லாவற்றையும் மறைத்து விட்டது.

இப்போதுதான் விபரம் சுற்றி யிருந்தவர்களுக்கு மெல்லப் புரிய ஆரம்பித்தது. சுற்றியும் ஓலை வீடுகள், சாதாரண அடிப் படைவசதி கூட இல்லாத ஓலை வீடுகளவை. இதனை பார்த்ததும் அவர்கள் பாமரர்கள் என்பது பொலிஸாருக்கு புரிந்தது. அவர் களுக்கு புரியும் பாஷையில் பொலீ சார் விளக்கினார்கள்.

ஐஸ் என்றால் இதுதான் என்றதும் உம்மா கதறி அழத் தொடங்கிட்டார். அங்கே வந்த பொலிசாரிடம் இவன் இப்படித் தான் அடிக்கடி நடந்து கிட்டான் எனக்கு இப்போதுதான் புரிகிறது.

'இவன்ட பொண்டாட்டி வெளிநாடு போனதிலிருந்து வேற எங்கேயும் போகாமல் வீட்டுக் குள்ளேயேதான் இருக்கான். எப்போதாவதுதான் பசிக்குது என்று வருகிறான். கண்ட கண்ட நேரத்தில குளிக்கிறான். தலைமுடியைக்கூட வெட்டுறானில்லை. இந்த பெடியன் கள் நண்பர்கள் என்று அடிக்கடி வாரானுங்க. எல்லாத்தையும் நாச மாக்கிட்டு இப்ப ஒன்னா போகப் போறானுங்க' என்று உம்மா புலம் பிக் கொண்டிருந்தார்.

'இது இவ்வளவு பெரிய விட யமாக இருக்கே இப்போ என்ன

செய்யப்போறிங்க இவர்களை கூட்டிப் போய்' என்று கேட்டாள் உம்மா.

'இப்ப இவங்களை கொண்டா போகப் போறிங்க... இனி இவன் இப்படி பண்ண மாட்டான். நாங்க பார்த்துக்கிறோம் விடுங்களேன்' என்று உம்மா வாய் பிதற்றிக் கொண்டிருந்தார்.

'இல்லம்மா இது பெரிய

கேஸ். சின்ன கேஸ் என்றால் சமாளிக்கலாம். இதை பாவிக்க இடமளித்தால் அவருக்கு பல வருட சிறைத்தண்டனை கிடைக்கும் அம்மா. நேற்றுக்கூட இரண்டு பாடசாலை மாணவிகளை பிடித்தோம். அவர்கள் பெரிய இடத்து பொம்பள பிள்ளைங்க. அவர்களை கைது செய்து விசாரித்த போது அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா.? இந்த ஐஸ் போதையை பாவித்தால் நீண்ட நேரம் தூங்காமல் கண் முழித்து படிக்க முடியும் என்று அவட கூட்டாளி ஒருத்தன் சொல்லியிருக்கான். அதனால அதை பாவிச்சதாக சொல்லி யிருக்காங்க. இப்போ ஆபத்தான நிலையில் இருக்காங்க. இத விட ஏலாது. நீங்க கோர்ட்ல பார்த்துக் கொள்ளுங்கம்மா' என்று சொல்லி அவர்களை தள்ளாத குறையாக கூட்டிக் கொண்டு சென்றார்கள்.

'இவன்ட பொண்டாட்டி வீட்டில் வறுமை நாளாந்த செலவுக்கே காசு இல்லன்னு வெளிநாடு போய்ட்டா. இவன் இங்க கெடந்து கெட்டுப் போய்டான். இவன் ஜெயிலுக்கு போறான். என்ட அல்லாஹ். நான் என்ன செய்வேன். ஏன் இப்படி சோதிக்கிறாய் யா ரப்பே...' என்று உம்மா புலம்பிக் கொண்டிருந்தார். யார் யாரை ஆறுதல் படுத்துவது என்ற நிலையில் எல்லோரும் இருந்தனர். வேடிக்கை பார்க்க வந்த கூட்டங்கள் சற்று விலகி புதிதாக வந்தவர்களுக்கு நடந்த சம்பவத்தை பாடமெடுத்துக் கொண்டிருந்தார்கள். ஊரவர்களுடன் சேர்ந்து தம்பியுட்பட போதைப்பொருள் பாவனையாளர்களை மீட்டெடுத்து இயல்பு நிலைக்கு கொண்டு வரவேண்டுமென்ற தீர்மானத்துடன், நான் உம்மாவை தேற்றி வீட்டுக்குள் அழைத்துச் சென்றேன்.

ஒவென பெய்து கொண்டிருந்த மழை இப்போது தூறலாக மாறிக் கொண்டிருந்தது.

**ஜே.பிரோஸ்கான்**

கிண்ணியா

# காத்தல் கடனே

கடமைக் காத்தல் மாந்தர் கடனே
கனவின் வாழ்வை அகற்றிடுவாய்
மடமை யாவும் அறிந்து
கொண்டு
மண்ணில் நீயும்
வாழ்ந்திடுவாய்

கடலின் வாழ்வைப்
புரிந்து கொண்டால்
கடமை உன்றன் நெஞ்சினிலே!
படகின் வாழ்வோ
கரைச் சேர்க்கும்
பணிந்து வாழ்வை
வென்றிடுவாய்

**சா.நாகூர் பிச்சை**

திண்டுக்கல்

# இல்லத்தரசிகள்



இல்லத்தரசி என்று
இலக்கியத்தில் பெயருமுண்டு .
‘இல்லை’ அவள் அரசியென்று
இருப்பிடத்தில் உள்ளவர்க்கு ....

அடுப்படியில் பாதி வாழ்க்கைய
எடுபிடியாய் மீதி வாழ்க்கை .
உருப்படியாய் பெற்றதெல்லாம்
உவப்பான பிள்ளைகள் தான்.

உறவுகளைப் பார்க்க வேண்டும்.
உதிராமல் சேர்க்க வேண்டும்.
இறகுகளை இழந்த போதும்
இருப்பவரை காக்க வேண்டும்
என்ற எண்ணம் ஒன்றே மூச்சு.
இறுதிவரை அதுவே பேச்சு .
பிள்ளைகளை கற்க வைக்க
பின்னாலே திரியும் போதும் ,
சில்லறைகள் சேர்த்து வைக்க
சிக்கனமாய் இருக்க நேரும் ,

‘ இல்லை ‘ என்று சொல்லாமல்
இருப்பதெல்லாம் கொடுத்து ,
பிள்ளைகளை வளர்ப்பாரே
பட்டினியை பொறுத்து .

ஊதியமும் பெறுவதில்லை .
உண்மை அன்பில்
அவளே எல்லை .
பாதிக்கண்ணை மூடிக் கொண்டு
பாலூட்டி தூக்கமின்றி – பிள்ளை
சாதிக்கையில் மனதால் நிரம்பி
சோதனைகள் ஏற்பாள் விரும்பி .

வாழும் வரை குடும்பம் என்றே
வாழுகிறார் தியாகியாக – உலகம்
வாழும் வரை போற்ற வேண்டும்
மனதில் வைத்து அரசியாக .

**கவிஞர். ஏரூர்**
**கே. நௌஷாத்**

## சமையல் டிப்ஸ்

ப்ரெஷர் குக்கரில் சமைப்பது பொங்கி வழியாமல் இருக்க, ஒரு எவர்சில்வர் கிண்ணத்தை மிதக்க விட்டு கொதிக்க விட வேண்டும்

வறுத்து உரித்த நிலக்கடலை ஒரு கப் அளவு கிரைண்டரில் ஒரு சுற்று அரைத்து, கண்ணாடி போத்தலில் போட்டு வைத்தால், தோசை, ஐஸ்கிரீம் பரிமாறும் போது தூவி விட்டால் சுவையாக இருக்கும்.

# வாப்பாதான் முதல் ஹீரோ...

*சராசரிக்கும் சற்று அதிக உயரம்.பளிச்சென்ற நிறமும், சுருட்டை முடியும், பூனைக் கண்களும் வாப்பாவின் தனித்துவ அடையாளங்கள்.*

*12.11.2024 உடன் வாப்பா வஃபாத்தாகி சரியாக இரண்டு வருடங்கள் நிறைவு பெறுகின்றது .என்றாலும் வாப்பா இன்றைக்கு வரைக்கும் எங்களோடு ஒன்றாக இருப்பது போன்ற உணர்வே எனக்குள் எப்போதும்.வாப்பாவிற்கு வல்ல நாயன் உயர்வான சுவன வாழ்வை அருள வேண்டும் என்பதே எங்கள் அனைவரினதும் பிரார்த்தனையும் கூட.*

*எனக்குத் தெரிந்து வாப்பா எப்போதுமே தன்னை இளமையான ஒருவராகவே உணர்வார்கள் .மற்றவரும் அவ்வாறுதான் இருக்க வேண்டுமென்று விரும்பும் கலகலப்பான ஒருவர். பேரன் ஸயானுக்கு உம்மும்மாவாகிவிட்ட என்னைக்கூட, அவர்களின் இறுதிக் காலம்வரை சின்னப் பிள்ளையாகவே நடத்திய குழந்தை மனசு வாப்பாவிற்கு.*

*வாப்பாவைப் பற்றி நிறையவே எழுதலாம்.*

*நேற்று முழுக்க அவர் களைப் பற்றி எழுத வேண்டும் என்ற உணர்வு எனக்குள் பொங்கிப் பிரவாகித்தாலும் ஒரு வார்த்தைதானும் வந்து விழுவதாயில்லை.*



*மனதுக்குப் பிடித்த ஒரு புத்தகத்தைப்பற்றி எழுத நினைத்தாலும் அதிலுள்ள நமக்குப் பிடித்த எந்த ஒரு விட யத்தையாவது தவற விட்டு விடுவோமோ*

*என்ற பதட்டம் கூடவே வந்து ஒட்டிக் கொள்வதைப் போல நேற்று முழுக்கப் பெரிய அவஸ்தை.*

*வாப்பாவும் அப்படித்தான்.. எதையும் மனத்திருப்தியோடுதான் செய்து முடிக்க விரும்புவார்கள்.*

*திருகோணமலை இலங்கைப் போக்குவரத்துசபையில் ஒரு எழுது வினைஞராகக் கடமைபுரிந்த வாப்பா காலை ஆறுமணிக்கே வெளிக் கிட்டுப்போனால் மாலை ஆறுமணியளவில்தான் வீடு திரும்புவார்கள்.*

*அதற்கிடையில் நாங்கள் குளித்து ரெடியாகி உற்சாகமாய் காத்தி ருப்போம் வாப்பும்மா வீட்டிற்கு அவரோடு செல்வதற்கு.*

*அது ஒரு ஆனந்தப் பயணம்.*

*வாப்பாவின் சைக்கிள்தான் எங்கள் மந்திரக் கம்பளம்.*

*பின்கெரியரில் காக்காவும்(அண்ணா), முன்வாரில் தாத்தாவும் பாய்ந்து ஏறி உட்கார்ந்து விட்டால் நான் எங்கே இருப்பது என முழித்துக் கொண்டு நிற்பேன்.*

*வாப்பாதான் உடனே சிரித்தபடி என்னை தூக்கித் தனது ஒரு கால்தொடையில் நிற்பாட்டித் தன் கழுத்தை கட்டிப்பிடித்துக் கொள்ளச் சொல்வார்கள்.*

*பிறகென்ன அந்த மாலை இரவின் மெல்லியஒளியில் காற்றைக் கிழித்து விரையும் எங்கள் ஆனந்தப்பயணம்.*

*எங்களுக்குச் சொல்வதற்கென்றே ஒவ்வொரு நாளும் அவர்களின் தொண்டைக்குழிக்குள் நிரம்பி வழியும் பலநூறு கதைகள்.*

*அக்கதைகளுக்குள் இடைக்கிடையே கிண்டல்களும் சிரிப்புமாய்.. மாயக்கம்பளம் எங்கள் குறிஞ்சாக்கேணிப் பாலத்தைக் கடக்கும்போதே கடல் காற்றின் அரவணைப்பில் நான் மெல்லத்தூங்கி விடுவேன்.*

*பிறகு வாப்பாதான் கொஞ்சம் தட்டி எச்சரிப்பார்கள்.*

*எனக்குத் தெரிந்து,எங்களின் வாப்பும்மாவின் இறுதிக்காலம் வரை அவரின் பெரும்பாலான எடுபிடி வேலைகளையும் எங்களின் வாப்பாவே செய்து கொடுப்பார்கள்.*

*வாப்பும்மாவின் மனம் குளிர்ந்த ஒரு மகனாக மட்டுமில்லாமல் அவரின் மாமியாகிய எங்கள் உம்மும்மாவையும் உம்முமாவின் இறுதிக் காலத்தில் அவர்களின் சொந்தத் தாய்போலவே கவனித்த அனுபவம் வாப்பாவுக்கு உண்டு.*

*இதேபோலத்தான் என் உம்மாவிற்கு எப்போதும் நல்ல கணவராய் இருந்தார்கள்.*

*அந்தக்காலத்தில் ஊரில் பெண்கள் தொழில் பார்க்கத் தயங்கிய வேளையில் குடும்பத்தின் சில பெண்களே 'மனிசிக்கி வேலை எடுத்துக் குடுத்திருக்கான்.இனியென்ன அவட. Hand Bag ஐத் தூக்கிக் கொண்டு பின்னாலே அலையப் போறானாக்கும்..!.' என்று நக்கலடித்ததையும் பொருட்படுத்தாமல் தைரியமாய் உம்மாவை ஒரு ஆசிரியையாக்கி ஊருக் கான ஒரு சமூகக் கடமையை அழகாய் நிறைவேற்றி வைத்தார்கள்.*

*உம்மா ஆசிரியராய்.. அதிபராய் 36 வருடங்கள் அரசபணி புரிந்த காலங்களிலும், அவர்களின் இதர கடமைகளில் சுதந்திரமாக இயங்க விட்டதோடு வீட்டு வேலைகளிலும் தாராளமாய் உதவி செய்தார்கள்.*

*அவர் தனது ஒரேயொரு விடுமுறை நாளிலும் கொடிகள் நிறைய உடுப்புகள் கழுவிக்காயப் போடும் அழகே தனி.*

*இப்போதும் எங்களுக்குப் போலவே எங்கள் பிள்ளைகளுக்கும் வாப்பா தான் முதல் ஹீரோ.*

*வாப்பா குளிக்கும்போது சவர்க்கார நுரையை முகம் நிறைய அள்ளிப் பூசிக் கொண்டே கண்களைச் சுற்றியுள்ள நுரையை விரல்களால் வழித்தபடி தலையை நிமிர்த்தி சிரிப்பதாக என் மூத்தவள் இப்பவும் 'போலச்செய்து' காட்டி மகிழ்வாள்.*

*எங்களைப் போலவே எங்கள் பிள்ளைகளையும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டுபோய் உள்ள பொருட்கள் எல்லாம் வாங்கிக் கொடுத்து அவர்களை மகிழ்ச்சிப் படுத்துவார்கள்.*

*எங்காவது குடும்பத்தோடு சுற்றுலா என்று வெளிக்கிட்டால் எல்லா வேலைகளையும் விட்டுப் போட்டு உற்சாகமாய் கேமராவையும் தூக்கிக் கொண்டு எங்களுக்குக் காவலாய் வழிகாட்டியாய் எத்தனை நாட்கள் என்றாலும் கூடவே வந்து விடுவார்கள்.*

*அவர்களுக்கிருந்த பிறமொழிப் பரிச்சயமும்.. அமைச்சராக இருந்த தன் மூத்த சகோதரருடன் செய்த பயண அனுபவங்களும் எங்களுக்கும் உதவியாகிப்போனது இதில் மட்டும்தான் என்று நினைத்துக் கொள்வேன்.*

*மார்க்கக் கடமைகளில் எவ்வளவுக்கு எவ்வளவு பேணுதலோ அதே அளவுக்கு இறுக்கங்கள் அற்ற ஒரு இயல்பான வாழ்க்கையை எங்களையும் வாழச் சொல்வார்கள். நல்ல வாசிப்பும், கலைகளை ரசிக்கும் ஆற்றலும் , அவ்வப்போது மாறிக்கொண்டு வரும் புதிய தொழிநுட்பங்களை அறிந்து அவற்றைக் கையாளும் ஆர்வமும் அவர்களுக்கு நிறையவே உண்டு.*

எனது நாலைந்து வயதுகளில் வாப்பா முயல் வேட்டைக்குப் போய் முயல் கொண்டு வந்து ஆச்சரியப் படுத்துவார்கள்.

எங்கள் குறிஞ்சாக் கேணி வளவுக்குப் பின்னால் இருந்த ஆற்றில் எங்களையும் கூட்டிப்போய் தூண்டிலில் மீன் பிடிக்கப் பழக்குவார்கள்.

எனது மூத்த சகோதரர் ரியாட் ஊருக்கு வரும்போதெல்லாம் வாப்பாவிற்கென விசேடமாக போன், கேமரா,டிவி எல்லாம் அடிக்கடி புதிது புதிதாய் வாங்கிக் கொடுப்பதும் வாப்பாவின் இந்த ரசனை உணர் வுகளை அறிந்ததால்தான் போலும்.

உண்மைக்கு ஒரு நல்ல மகனாய், கணவராய், தந்தையாய், எங்கள் பிள்ளைகளின் பாசமுள்ள 'ரிலாப்பாவாய்', சமூகத்திலும் தமது மரியாதை இழக்காத உயர் மனிதராய் வாழ்ந்த எங்களின் வாப்பாவிடம் எனக்குத் தெரிந்த ஒரே பலவீனம் தானறிந்த உண்மையை முகத்தாட்சண்யம் எல்லாம் பாராமல் முகத்துக்கு முன்னே பேசி விடுவதுதான். என்றாலும் அவர்கள் அந்தப் பழக்கத்தை இறுதிவரைக்கும் விட்டு விடவேயில்லை.

ஆனாலும் அது அந்த நேரத்தில் மட்டுமே. அடுத்த கணமே இயல்பாக மாறி வழமையான அன்பைப் பொழியத் தொடங்கி விடுவார்கள்.

இதேபோல வாப்பா எல்லா சமூகத்தவரோடும் நல்ல நட்போடும் அன்போடும் பழகுவார்கள்.

வெசாக் நாளில் எங்களை திருமலைக்கு அழைத்துச் சென்று காட்டுவார்கள். அங்கு வரும் அவர்களின் சிங்கள நட்புகள் எங்களுக்கு குளிர்பானம் வாங்கித் தருவதும் இன்னும் நல்ல நினைவு.

வாப்பாவுக்கு கொஞ்ச நாட்களாய் முழங்கால் வருத்தம் இருந்தது. நடக்கச் சிரமப் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

சில்லு மாத்த வேணுமாம் என்று யாரோ ஒரு டொக்டர் முடிவா சொல்லி விட்டாராம். வாப்பாக்கு அதெல்லாம் விருப்பமில்லை.ஏலாதென்று சொல்லி விட்டு தம்பி மாசாத் டாக்டர் கொடுத்த எண்ணெய் பூசி மசாஜ் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

என்றாலும்.நிலையிலா இவ்வுலக வாழ்வில் நிரந்தரமாய் யாரும் தங்கிவிடுவதில்லை தானே! வாப்பாவிற்கும் மறுமை வாழ்விற்கான அழைப்பு ,கட்டி என்ற பெயரில்.சத்திர சிகிச்சைக்குப் பின்னரும் அது தொடர்பான வலியும் நோய்மையும் ஓரிரு வாரங்கள் தொடர ,யாருக்கும் பாரமாய் வாழ விரும்பாத வாப்பாவை அல்லாஹ் நிரந்தரமான அந்த மறுமை வாழ்விற்காய் அழைத்துக் கொண்டான்.இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

*கடந்த வாரம் உம்மா,சகோதரிகளை பார்த்துப் பேசிவிட்டு வர என்று உம்மா வீட்டுக்கு போயிருந்தேன்.*

*எங்கள் முன்வீட்டு சாச்சியும் அங்கு வந்திருந்தார்.*

*உம்மாவின் தூரத்துச் சொந்த உறவுமுறையும், அயல் வீடென்ற நெருக்கமும் மட்டுமன்றி, உம்மாவில் அவர்கள் வைத்திருந்த அளவுக் கதிகமான அன்பும் அவரை மிகச் சிறுவயதில் இருந்தே எங்களோடு நெருங்கிப் பழக வைத்திருந்தது.*

*இப்பவும் இடைக்கிடையே வந்து உம்மாக்கு வாசல் கூட்டிக் குப்பைக்கூளங்களை அள்ளிக் கொட்டித் துப்பரவாக்கி கொடுப்பார்.*

*சாச்சியிடம் வழமையான நல விசாரிப்புகளோடு நின்றுவிடாது பேச்சுவாக்கில் 'வாப்பா முந்தி எப்படி சாச்சி..?' என்றேன்.*

*முகம் பூரித்து மலர, கொஞ்சம் வெட்கச் சிரிப்போடு,*

*'ஓம் புள்ள. இப்பதான் உங்கட வாப்பாவை நினைச்சு துவா செஞ்சு போட்டு வந்தேன். அவங்க உங்கடம்மாவ முடிச்சி இந்த ஊட்டுக்கு வந்த காலத்தில நீ பார்த்திருக்கணுமே அவர்ட அழகை. கட்டக்கை வெள்ள சேர்ட்டும் வெள்ள சாரணும் உடுத்தி ,சும்மா பளபளன்னு எப்பவும் மாப்புள மாதிரித்தான் ஊட்டுலயும் இருப்பார்.*

*அப்ப இந்த ரோட்டுல இருந்த அஞ்சாறு கொமர்ப் பொட்டையொள், 'முடிச்சிறதெண்டா அத்சலான் மச்சான் மாதிரி லோங்ஸ்சும் போட்டு பக்கட்ல பேனையும் குத்துன ஆம்புளயத்தான் முடிப்பன்' என்டு... அவளுகளுக்கு பேசுற கலியாணம் எல்லாம் பிந்த உட்டுப்போட்டு ஒத்தக்காலில இல்லயா நின்டாலொள்...!'*

*சாச்சி சொல்லிக் கொண்டு போகிறார்..*

*எனக்கோ சின்ன வயசிலே சாச்சி 'இவளுக்கு அப்புடியே அத்ஸலான் மச்சானுக்குப் போல கலரும்.. பூனக்கண்ணும்.. சுருட்டை முடியும்...' என்று சொல்லிச்சொல்லி என்னைத் தூக்கிச் கொஞ்சுவது மனக் கண்ணில் திரைப்படமாய் விரியத் தொடங்கிற்று.*

*உண்மைதான் எங்களுக்கு வாப்பா எப்பவுமே முதல் ஹீரோதான்.*

**எஸ். ஃபாயிஸா அலி.**

**கிண்ணியா**



# பஸீல் காரியப்பர் என்றொரு பாவலர்

பாவலர் பஸீல் காரியப்பர் சம்மாந்துறை மண் தந்த படைப்பாளி. 09-05-1940ல் பிறந்தவர். கல்முனையில் மணம் புரிந்து வாழ்ந்தவர்.1958ல் ஆசிரியராக நியமனம் பெற்றவர். 'நிதானி' என்ற புனை பெயரிலும் எழுதியவர்.

'தங்கம்மா'அவர் தந்த நெடுங் கவிதை நூல். 'ஆத்மாவின் அலைகள்' 66 கவிதைகளைக் கொண்ட அவரின் தனிக்கவிதை நூல். அந்நூல், தென் கிழக்கு பல்கலைக் கழக தமிழ்ச்சங்க வெளியீடாக 2001ல் வெளியிடப்பட்டது.

பாவலர் தனது 66வயதில் 16-02-2006ல் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து கொண்டார்.

பாவளம் பஸீலி னோடு
பாவலம் வந்த, அந்த
நாளெலாம் நினைவில் நிற்கும்
நாமவர் ரசிகர், நட்'பூ'!
கல்முனை இல்லம் வந்து
கதைத்துநாம் இருந்த நாட்கள்

கட்டிலின் கீழே, அங்கோர்
கட்டினை எடுத்து, நாடா
பிரித்தவர் கவிதை சொல்லிப்
பேசிடும் செப்பம் ஆஹா..!

இரசிப்பினை உணர்வை, மேலும்
இலயிப்பினைச் சொல்லிச் சொல்லி
கலையினை, அழகை அன்னார்
கதைத்திடும் பாணி ..செப்பம்..!

'உரையாடல் இன்பம்' என்பார்
ஒருவருக் கொருவர் நட்பு
பொருந்திட, பின்னர் தானே
பொருந்திடக் கூடும், இந்த
உரையாடல் என்றும் சொல்வார்!

குரலெடுத் தன்னார் சொல்லும்
கவிதைகள் கேட்கக் கேட்க
மனத்தினில் பதியும், அந்த
உணர்வினில் இல்லம் வந்தால்
நமக்கொரு கவிதை பூக்கும்.

‘ஆற்றில் ஒரு பூ
அனாதையாய்ச் செல்கிறது..
காற்றின் இதழால், தன்
காவியத்தை வரைந்தபடி
ஆற்றில் ஒருபூ அழகாகச்
செல்கிறது.

செங்குருதி ஆற்றிலொரு
சின்னமலர் போகிறது
எங்குவரைப் போகின்றோம்
என்று அறியாமல் போகிறது

தாய் மரத்தைப் பிரிந்த அது
தன் கிளையைப் பிரிந்த
அது ஓயாத நீரோட்டம்
ஒன்றில் கலந்தபடி
வாடா முகத்துடனே
வடிவாகச் செல்கிறது

பாவலர் கவிதை சொல்லப்
பரவசம் வந்துசேரும்

‘கயிற்றோசை கேள் மகளே
தொட்டில் கயிற்றோசை
கேள் மகளே!‘

‘அழகான ஒரு சோடிக் கண்கள்
அவள் அம்புகள் பாய்ச்சி என்
உளமெல்லாம் புண்கள்‘

பாவலர் கவிதை மட்டும்
படைப்பவரல்லர்,மேலும்
ஓவியர்,புகைப்படக் கலைஞர்,
வானொலி அறிவிப்பும்
வழங்கிடும் தகைமையாளர்.

பாவலர்
நல்லதொரு கணவன்
நல்லதொரு தந்தை,
பாத்திமா, காமிலா, ஜம்முனா,
தாரிக் பிள்ளைகள்.
இவர்களுக்கும் இலக்கியத்தை
எழுதி வைத்த தந்தை அவர்.

‘மகனே உன்னை நான்
விட்டுப் போகிறேன்
அழுத்தமாய் கால்களை ஊன்றிக்
கொள்வாய் (தாரிக்)!

மரத்தை நட்டவன்
தண்ணீர் ஊற்றலாம்
எருவும் இடலாம்
காவல் செய்யலாம்!

கிளைகளை எப்படி வடிவம்
அமைப்பது ...?
இலைகள் எவ்விடத்தில்
தளிர் விடும் என்பது..?

அந்த மரம் - தன் அழகை
அது பெறும்
விந்தை நான் அறியேன்
விளக்கம் பெறலாம் - ஆதலால்
ஆறுதலோடு நான் போகிறேன்

’‘வடிவச் செழுமை‘
அவர் வார்த்தை.
கவிதைகளை வடித்து
கட்டி வைத்து,
பின் எடுத்து,
சில நாட்கள்

*படித்து படித்துச்*
*செப்பனிட்டு செப்பனிட்டு*
*சுய திருப்தி வரும் வரையில்*
*சீர் செய்த கவிஞர் அவர்.*
*பிரசுரத்தை பிரபலத்தை*
*நாடாத, ஓடாத  ஒரு கவிஞர்*

*'பெருகிய உணர்வின்*
*இறுகிய இசையோட்டமான*
*சித்திரச்  சிறைப் பிடிப்பு கவிதை'*
*என்பார்.*

*பட்டங்கள் விருதுகளை*
*மறுதலித்த கவிஞர் அவர்,*
*வாழ்வோரை வாழ்த்தி*
*வந்திருந்த விருதொன்றை*
*போய் எடுக்க விரும்பாமல்*
*புறமொதுக்கி விட்ட கவி!*
*பாவலர் பஸீல் காரியப்பர்.*

*உள் மனதின்  உணர்வுகளை*
*உணர்வுகளின் அலைகளினை*
*சொல்லிக் கவி வடித்த*
*சுந்தரப் பாவாணன்*

*சித்திரமாய் நூதனமாய், மிகச்*
*சிறப்பாய் உணர்வுகளை*
*ஒத்திசைப்போ டெழுதி வைத்த*
*ஒரு சிறந்த கவிவாணன்*

*காட்சிப் படுத்தல்களைக்*
*கடைப்பிடித்து, படப்பிடிப்பாய்*
*பாப்புனைந்து தந்த*
*பக்குவப் பாவாணன்*

*வாழ்ந்த அனுபவங்கள்*
*வரைந்த குறிப்புகளை*
*தேர்ந்து கவிசெய்த,*
*கைதேர்ந்த படைப்பாளி*
*வித்துவச் செருக் கில்லா*
*சத்திய எழுத்தாளன்*
*தத்துவங்கள் உட்பொதிந்த*
*தமிழ்க் கவிதைத் தடம் பதித்தோன்*

*நுட்பமாய் எதனையும்*
*நுணுகியே நோக்கி வந்த*
*அற்புதக் குணம் வாய்த்த*
*அறிவாளன் ஆய்வாளன்*

*படித்தவரும் பாமரனும்*
*பாகுபடா மனநிலையில்*
*உரையாடி நல்லுறவில்  ஒளிர்*
*மனதைத் தேடுகிற உறவாளன்*
*திறந்த மன நெறியாளன்*

*தெவிட்டாத  மொழியாளன்*
*அரங்கினிலும் ஜொலித்திட்ட*
*அகம் மலர்ந்த உரையாளன்.*

*பாவலராய் நாவலராய்*
*பண்பான மானிடராய்*
*வாழ்ந்து பணிபுரிந்த பாவாணர்*

*பஸீல் காரியப்பர்*
*இறையழைப்பை ஏற்று*
*போய்விட்டார்*
*அவரின் நினைவில் வாழ்கிறோம்*

**பாவேந்தல்**
**பாலமுனை பாறூக்**




**Sarav Anan**

- ♣ தவளை கத்தினால் மழை
- ♣ அந்தி ஈசல் பூத்தால் அடை மழைக்கு அச்சாரம்.
- ♣ தும்பி பறந்தால் தூரத்தில் மழை.
- ♣ எறும்பு ஏறில் பெரும் புயல்.
- ♣ மார்கழி மழை மண்ணுக்கு உதவாது.
- ♣ தை மழை நெய் மழை.
- ♣ மாசிப் பனி மச்சையும் துளைக்கும்.
- ♣ தையும் மாசியும் வீடு மேய்த்து (கூரை வேய்ந்து) உறங்கு.
- ♣ புற்று கண்டு கிணறு வெட்டு.
- ♣ வெள்ளமே ஆனாலும் பள்ளத்தே பயிர் செய்.
- ♣ காணி தேடினும் கரிசல் மண் தேடு.
- ♣ களர் கெட பிரண்டையைப் புதை.
- ♣ கெட்ட நிலத்துக்கு எட்டு வன்னி கெட்ட குடும்பத்துக்கு எட்டு வெள்ளாடு.
- ♣ நன்னிலம் கொழுஞ்சி நடுநிலம் கரந்தை கடை நிலம் எருக்கு.
- ♣ நீரும் நிலமும் இருந்தாலும் பருவம் பார்த்து பயிர் செய்.
- ♣ ஆடிப்பட்டம் தேடி விதை ( ஆடிமாதம் பயிர் செய்)
- ♣ விண் பொய்த்தால் மண் பொய்க்கும்.
- ♣ மழையடி புஞ்சை மதகடி நஞ்சை.
- ♣ களரை நம்பி கெட்டவனும் இல்லை மணலை நம்பி வாழ்ந்தவனும் இல்லை.
- ♣ உழவில்லாத நிலமும் மிளகில்லாத கறியும் வழ வழ.
- ♣ அகல உழவதை விட ஆழ உழுவது மேல் .
- ♣ புஞ்சைக்கு நாலு உழவு நஞ்சைக்கு ஏழு உழவு.
- ♣ குப்பை இல்லாத வெள்ளாமை சப்பை.
- ♣ ஆடு பயிர் காட்டும் ஆவாரை கதிர் கட்டும்.
- ♣ கூளம் பரப்பி கோமியம் சேர் .
- ♣ ஆற்று வண்டல் தேற்றும் பயிரை.
- ♣ நிலத்தில் எடுத்த பூண்டு நிலத்தில் மடிய வேண்டும்.

- காய்ச்சலும் பாய்ச்சலும் வேண்டும்.
- தேங்கி கெட்டது நிலம் தேங்காமல் கெட்டது குளம்.
- கோரையை கொல்ல கொள்ளுப் பயிர் விதை.
- சொத்தைப் போல் விதையை பேண வேண்டும்.
- விதை பாதி வேலை பாதி.
- காய்த்த வித்திற்கு பழுது இல்லை.
- பாரில் போட்டாலும் பட்டத்தில் போடு.
- கோப்பு தப்பினால் குப்பையும் பயிராகாது.
- ஆடி ஐந்தில் விதைத்த விதையும் புரட்டாசி பதினைந்தில் நட்ட நடவும் பெரியோர்கள் வைத்த தனம்.
- கலக்க விதைத்தால் களஞ்சியம் நிறையும். அடர விதைத்தால் போர் உயரும்.

**(நம் மூத்த முன்னோர் சொல்மிக்க மந்திரமில்லை. மேழிச் செல்வம் கோழை படாது)**

# நாணயம்

கடைகளில் வாங்கிய
பொருட்களுக்கு
பணம் தரும்போது
தவறுதலாக கணக்கிட்டு
கடைக்காரர் மீதிப்பணத்தை
மிகையாகத் திருப்பியளிக்கையில்
சாத்தான் சட்டைப் பையில்
பணத்தையமுத்தி
தலைகுனிந்து
அவ்விடத்தை விட்டு
விரைவில விலகச் சொல்லும்

சாத்தானை புறந்தள்ளி
நாணயத்தைத் திருப்பித்
தருவதிலிருக்கிறது நாணயம்
சுண்டிய நாணயத்தின்
இரு பக்கங்களில்
சாத்தானும் கடவுளும்
மனம் எந்த பக்கத்தில்
சாய்கிறதென்பது
தீர்மானிக்கிறது
நாம் யாரென்பதை

**பா.சிவகுமார்**
சென்னை,
தமிழ்நாடு, இந்தியா




(சிறுகதை)

அந்த நாள் செவ்வாய். காலை நேர சூரியக் கதிர்கள் பிரான்ஸ் சிற்றியின் வீடுகளில் மிதமான வெப்பத்தைத் தந்தன. இஸ்லாம் நகர் அருகே அமைந்திருந்த 65 வீட்டுத் திட்டத்தில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். சற்றே தொலைவில் வாழைகள் நிறைந்த ஆற்றங்கரை, குளக்கரை அந்த ஊரின் அழகிய மையமாக இருந்தன. ஆனால், அந்த நாளின் பின்னேரம் அதற்குப் பெருமளவு மாறுபாட்டைக் கொண்டுவந்தது.

மழை தொடங்கியது மெதுவாக. ஆனால், மாலை ஆகும் போது அது திரவமோ அல்லது வானத்தில் குவிந்த கடல் மூட்டமோ என்று கருதும் அளவுக்கு கொட்டித் தீர்ந்தது. மழை மட்டுமல்ல, ஏதோ குளமொன்றில் கசிந்த வெள்ள நீர் விறைச்சலோடு ஊர்களை நோக்கிப் பாய்ந்தது.

பிரான்ஸ் சிற்றி, இஸ்லாம் நகர், ஸக்காத் கிராமம் மற்றும் 65 வீட்டுத் திட்டம் எனும் வாழ்விடங்களை வெள்ளம் அடித்துச் சென்றதைப் போலத் தோன்றியது. வீட்டின் கண்ணாடிகள் உடைந்தன. கால் நடைகள் அள்ளுண்டன. பொருட்கள் இழுத்துச் செல்லப்பட்டன. மக்கள் தங்களின் உயிரைப் பாதுகாக்கும் முயற்சியில் வீடுகளை விட்டு ஓடத் தொடங்கினர்.

'எல்லோரும் அருகிலுள்ள பள்ளி வாசலுக்கு அல்லது பாடசாலைக்குச் செல்லுங்கள்' என்று புலம்பும் பள்ளி வாசல் ஒலிபெருக்கி மூத்தவர்களின் குரலில் கேட்டது. ஆனால், சில குழந்தைகள் தங்களின் பெற்றோர்களைக் காணாமல் கண்ணீர் வடிய, அவசரமாகத் தன்னார்வக் குழுக்கள் அவர்களை பாதுகாப்பதற்கு முயன்றன.

ஊரின் பாடசாலைகள் இடைத் தங்கும் முகாம்களாக மாறின. இன்னும் பல உறவுக்காரர்களின் வீடுகளும் இடம் கொடுத்தன. பள்ளியின் மண்டபம் தற்காலிக தங்குமிடமாக மாற்றப்பட்டது. ஆனால், குளிர் மழையின் தாக்கம் மட்டும் நின்றுவிடவில்லை. சுகாதார வசதியின்றி மக்களின் உடல் நிலைகள் பாதிக்கப்பட்டன. குழந்தைகள் குளிர்வாயுவின் பிடியில் சிக்கினர். 'நாங்கள் எப்போது மீண்டும் வீடு திரும்புவோம்?' என்ற கேள்வி ஒவ்வொரு முகத்திலும் நிரந்தரமாகக் காணப்பட்டது.

ஒரு கிழமையின் பின் மக்கள் மீண்டும் தங்கள் வீட்டிற்குத்

திரும்புவதற்கான அனுமதி வந்தது. ஆனால், அவர்கள் மீண்டும் நுழைந்தது வீடுகளுக்கு அல்ல; அது சிதறிய நினைவுகளுக்குள் தான். ஆற்றங்கரையில் கொடிய விஷ ஜந்துக்கள் மிதந்தன. ஆற்று வாழைகள் ஊர்களின் தெருக்களை அடைத்துக் கொண்டன. முதலைகள் குடியிருப்புகளைத் தொற்ற வந்தது போலத் தோன்றியது.

'வெள்ளம் பாய்ந்த நிலத்தை நாங்கள் எப்படி வாழத்தகுந்த இடமாக மாற்றுவது?' என்று ஒவ்வொருவரும் குழப்பமடைந்தனர்.

ஆனால், சோலையை விட்டுப் போக மாட்டோம் என்ற உறுதியுடன் ஊரின் தன்னார்வக் குழுக்கள் ஒரு சீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கின. வீடுகளைச் சீரமைத்தனர். அப்படியே மனித மனங்களும் மீண்டும் மீளத் தொடங்கின.

'மழையின் கோபத்தை ஏற்று, அதன் பிரகோபத்தின் வழியே வாழலாம்' என்ற ஒலி வடிவம் ஊர் மக்களிடம் கேட்கத் தொடங்கியது. சில நாட்களுக்குப் பிறகு, 65 வீட்டுத் திட்டம் ஒழுங்காக மாறின. குழந்தைகள் மீண்டும் விளையாடத் தொடங்கின. இஸ்லாம் நகர் மீண்டும் ஒரு புனிதமயமான நம்பிக்கையுடன் எழுந்தது.

வெள்ளம் பாய்ந்தது வீடுகளில் மட்டும் அல்ல; அது மனங்களை உலுக்கியது. ஆனால், மனித உறவுகளின் சக்தி அதனை மீறி, பூமியின் மீது மறுபடியும் தன்னம்பிக்கையை விதைத்தது.

இஸ்லாம் நகர் முழுவதும் இப்போது புதிய மைல்கல் பதித்தது. மக்களின் ஒற்றுமையும் ஊர் சீரமைப்பிலும் தன்னார்வக் குழுக்களின் தியாகமும் புதிதாக ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தியது. ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் புதிய மரங்கள் முளைத்தன, அவை ஒரு புதிய ஆரம்பத்தின் சின்னங்களாக இருந்தன.

ஆனால், வாழ்க்கை பழைய நிலைக்கு திரும்புவதில் சிரமங்கள் இருந்தன. சிலர் தங்கள் வேலை வாய்ப்புகளை இழந்தனர், சிலர் தங்கள் குடியேற்றங்களை மட்டுமே இழக்கவில்லை; அவர்களின் தாய் மண்ணுடனான அடையாளத்தையும் இழந்தனர். வெள்ளத்தின் அடையாளங்களாக அவற்றின் கதவுகளில் மூடப்பட்ட மஞ்சள் தழும்புகள் தங்கி நின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு உதவ அரசு பரந்த அளவில் உதவியுடன் அடுத்த கட்டங்களை அறிவித்தது. புதிய திட்டங்களின் கீழ் இயற்கைக்கு உகந்த வகையில் கிராமத்தின் அடிப்படை வடிவமைப்புகளை மாற்றியது. மக்கள் சூழலுக்கு ஏற்ப பொருட்களை மாற்றிக் கொண்டனர். ஆற்றங்கரை முழுவதும் பாது காப்பு சுவர்கள் அமைக்கப் பட்டன. விஷ ஜந்துக்களை அகற்றும் பணிகள் வெற்றிகரமாக முடிந்தன.

பிரான்ஸ் சிற்றியிலும் 65 வீட்டுத் திட்டத்திலும் இஸ்லாம் நகர் முழுவதும் ஸக்காத் கிராமம் என

வெள்ளம் வாழ்வின் நம்பிக்கை மற்றும் சோர்வின் கதையை மீட்டுக் கொடுத்தது. மக்கள் இப்போது தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் தெய்வீகமாகக் கருதி வாழத் தொடங்கினர்.

'வெள்ளம் எங்களை நெகிழ வைத்தாலும், நம்மில் ஒற்று மையை உருவாக்கியது' என்று மூத்தவர்களில் ஒருவர் கூறினார். அந்த மூன்று கிராமங்களின் புதிய வாழ்க்கை ஒவ்வொரு நாளும் வெள்ளத்திற்கெதிரான மனித கோசமாக இருந்தது. அந்த மண்ணின் மணம் இப்போது வெள்ளத்தின் கதை பேசாது; அது மனித ஒற்று மையின் பொன்னான காலத்தைக் கூறும்.

மரங்களின் அடியில் ஒலித்த குழந்தைகளின் சிரிப்பு மீண்டும் கிராமங்களை உல்லாசமாக மாற் றியது. ஆற்றங்கரையில் மீண்டும் சின்னஞ்சிறு தோட்டங்கள் தோன்றின. மக்கள் மீளக் குடி யேறியவுடன், தாங்கள் மட்டு மின்றி இயற்கையையும், சுற்றுச் சூழலையும் பாதுகாக்க வேண் டிய அவசியத்தை உணர்ந்தனர்.

கிராமங்களைச் சுற்றியிருந்த நான்கு வெள்ளக் குளங்கள், நவியான் குளம், வட்டிக் குளம், பெரிய குளம், ஆலங்குளம் மீண்டும் அதே கரையைத் தாண்டி நடக்கும் மனித வாழ்க்கைகளுக்கு பாலமாக இருந்தன.

தன்னார்வக் குழுக்கள் தங்க ளின் பணியை நிறைவு செய்து கிரா மத்தை விட்டு செல்லும்போது, அவற்றின் உறுதியான பணி அனை வரையும் நெகிழச்செய்தது. புதிய வீடுகள், சுத்தமான குடிநீர், மீண்டும் நடைமுறைக்கு வந்த பள்ளிவாசல்கள், பாடசாலை, வைத்தியசாலை இவை எல்லாம் அவர்களுடைய உறு தியான செயல்பாடுகளின் விளைவு. அந்த மூன்று கிராமங்களின் மக்கள், தங்களின் வெற்றியை ஒரு திருப்பு முனையாகக் கொண்டாடினர்.

மக்கள் இயற்கைக்கு ஒருபடி அருகாமையாக வாழத் தொடங் கினர். ஆற்றங்கரைப் பகுதிகளில் வளமான மண் மீண்டும் விளைச் சலை வளர்த்தது. மீனவர்கள் தூண் டிலும் வலையுமாக அமர்ந்தனர். ஆனால், இந்த முறையில், அவர்கள் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இயற்கையின் அமைதியுடன் வாழ்ந் தனர்.

வெள்ளம், கிராமங்களின் வாழ்க்கையை மாற்றியபோதிலும், அவர்கள் புதியதொன்றை உரு வாக்குவதை நிறுத்தி விடவில்லை. ஒவ்வொரு வீட்டின் முன்பும் சூரிய ஒளியில் மின்சார தகடுகள் பிரகாசித்தன; ஆற்றின் நீர் மின் ஆற் றலுக்குப் பயன் படுத்தப் பட்டது.

அந்தக் கிராமங்கள் வெள் ளத்தின் தாக்கத்தைக் கொண்டிருந் தாலும், மனித உறவுகளின் கதை காற்றில் ஒலித்தது.

மூத்தவர் ஒருவர் சொன்னார்: 'நம்மை வெள்ளம் மீண்டும் ஒரு முகமாய் அமைத்தது. நம்மால் ஒரு வலிமையான சமூகத்தை உருவாக்க

முடியும் என்பதை உணர்த்தியது. நம்மில் ஒற்றுமையை வளர்த்தது.' இப்போது அந்த நான்கு கிராமங்களும் வெள்ளத்திற்கு எதிரான போராட்டத்தின் ஒரு சாதனையாகவும், மனித உணர்வுகளின் ஒற்றுமையின் சின்னமாகவும் காட்சி தருகின்றன.

இறுதியாக, பிரான்ஸ் சிற்றி, 65 வீட்டுத் திட்டம், இஸ்லாம் நகர், ஸக்காத் கிராமம் இந்த நான்கு ஊர்களும் இணைந்து செயல்பட ஒரு சங்கத்தை உருவாக்கின. அந்த சங்கம் கிராம மக்களின் நலனுக்காகவும், எதிர்காலம் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தவும் கடுமையாக உழைத்தது.

சங்கத்தின் மூலம் நான்கு ஊர்களும் ஒன்றுபட்டு பசுமை வளங்களை வளர்த்தன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களை உரமானமாக மாற்றி, உயிர்க்காகவும் சுற்றுச் சூழலுக்காகவும் புதிதாக மரங்களை நட்டினார்கள். ஆற்றங்கரைகளில் குளங்களை தோண்டி வெள்ளத்தை கட்டுப்படுத்தும் திடீர் பாசன அமைப்புகளை உருவாக்கினர்.


இளைஞர்கள் நீர்மூழ்கல் பயிற்சி, மீட்பு நடவடிக்கை கள், மற்றும் அவசர நடவடிக்கைகளுக்கான பயிற்சிகளை கற்றுக் கொண்டனர். அவர்கள் தங்கள் அனுபவங்களைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் பகிர்ந்து, மற்ற கிராமங்களின் வாழ்க்கையை மேம்படுத்த உதவினர்.

மீண்டும் வீடுகளுக்கு திரும்பிய மக்கள், புதிய உற்சாகத்துடன் தங்கள் வாழ்க்கையை தொடங்கினர். புதிய வீடுகளின் முன்பில் பழைய வீடுகளின் கல்லறைகளாகக் காட்சியளித்த வெள்ளத்தின் தடயங்கள் எங்கு பார்த்தாலும் இருந்தன. ஆனால் அதே சமயம், அந்தக் கற்களிலும் கண்ணீரையும் சிரிப்பையும் ஒரு சேர எழுதிய கதைகள் இருந்தன.

ஒருநாள், நான்கு கிராமங்களும் ஒன்றாக சேர்ந்து ஆற்றங்கரையில் ஒரு மகாநாட்டை ஏற்பாடு செய்தது. அதில் மூத்தவர் ஒருவர் பேசும் போது, அவர் சொன்னார்:

'வெள்ளம் நம்மை எவ்வளவு அழுத்தினாலும், நமக்குள் இருந்த அன்பை அழிக்க முடியவில்லை. இது வெள்ளத்தால் ஆன அழிவின் முடிவல்ல; நம்பிக்கையுடன் வாழ்வதற்கான துவக்கம். இங்கே இருந்த ஒவ்வொருவரும் ஆற்றங்கரையில் எழுந்த கீர்த்தி மண்டபங்கள்!' அந்த நாளில் முதல் முறையாக மக்கள் தங்கள் சிரமங்களை மறந்து எளிதாக சிரித்தனர். நான்கு கிராமங்களின் மக்களும் என்றும்போல ஒரே தேன்கூடாகவே வாழத் தொடங்கினர். அது புனைவாகவும் வரலாற்று செய்தியாகவும் மீண்டும் மீண்டும் வாழ்ந்தது. கதை இங்கே முடிகிறது, ஆனால் கிராமங்களின் புதிய வாழ்க்கை தொடர்கிறது. சூழல் மீட்பின் பேரொளியாக.

**டீன் கபூர்**



# கால மாற்றம்



பூமிப் பந்தின் சுழற்சியின் நிமித்தம்
பூவுலகில் மனிதன் வாழ்க்கை நித்தம்
புரவியெனப் புறப்பட்டு விரைவதிலே கவனம்
புவனத்தில் அவனுக்கு வாய்த்திடவே சுவனம்

மாற்றத்தின் பின்னே மனிதமும் மறந்து
ஏற்றம் உண்டென நம்பி ஏமாந்து
சுற்றமும் கசந்து நவீனத்தில் மிதந்து
அற்றம் நோக்கிச் செல்கிறான் அமிழ்ந்து

கால மாற்றத்தில் கொள்கையும் வேறுபடும்
கோல விகாரத்தை ஞாலமும் கூறிவிடும்
காலும் கையும் வலுவை இழக்கும்
கோலும் பிடித்தால் ஞானம் பிறக்கும்

சக்கர வடிவம் காலத்தின் பயணமே
ஒக்கலின் அர்த்தம் உணர்த்தும் தருணமே
உக்கிடும் எல்லா நிலையில்லா ஆக்கமே
திக்கெங்கும் உறுதியாய் இறையின் பக்கமே

**பஸ்லா பர்ஸான்**

காத்தான்குடி



# நானும் ஒரு மரமும்

கந்தாகிக் கவையாகி,
நிழல் பரப்பும், காட்டு மரம் நான்,
நீங்கள் கண்டுகொள்ளாதவரை.
என் கிளைகளை ஒடித்து,
வீரியம் குறைக்க விரும்புகிறீர்.
அப்படியே செய்யுங்கள்.
முன்னிலும் வீரியமாக வளர,
முனைப்புக் கொள்வேன்.

என் வேர்களைப் படரவிட்டு,
அத்தனை ஊட்டங்களையும்,
அசுரத் தனமாய் உறிஞ்சி,
ஒடிக்கப்பட்ட இடத்திற்கு
கொண்டு வருவேன்.
கவைகள் பலவாகி,
துளிர்விட்டு கிளைவெடித்து,
வீரியம் கொள்வேன்.
என்னவென்று
நினைத்தீர்கள் என்னை?
என்னில் கூடுகட்டி குஞ்சு பொரித்து,
அண்டி வருவோரை
கொத்தி விரட்டும்,
மலம் தின்னிக் காகங்களே!
நான் காற்றின் ஆதாரம்.
கூட்டோடு உங்களை,
தூக்கி வீசமுடியாதென்றா
எண்ணியிருக்கிறீர்கள்?

கூடுகளேயில்லாமல்
திருட்டுத் தனமாய்
இனம் பெருக்கும், குயில்களே!!
கொத்தி விரட்டினாலும்,
காகக்கூடுதான்
உங்களுக்கான சாபம்.

எந்தப் பறவைகளேனும்
என்னில் இளைப்பாறட்டும்.
என்னால் பசியாறட்டும் அணில்கள்,
தாவித்தாவி கீச்சிடட்டும்.
மந்திகள் கிளைகளில்,
ஊஞ்சலாடி மகிழட்டும்.
பட்டாம் பூச்சிகள்,
சுற்றிச் சுற்றிப் பறக்கட்டும் எறும்புகள்
புற்று வைக்கட்டும்.
இன்னுமின்னும்....

இவற்றின் இருப்புகளாகும்
கருணையொன்றே,
எனக்குப் போதுமானது.

**சம்மாந்துறை மஷ்றா**

**மருதமுனை.**

# சமூகம்

கடினமான பணியிலும் நீ
கால் பதித்து வெற்றி கண்டால்
புதினமாக அதைச் சமூகம்
புகழ் பாடி கொண்டாடும்
கவனமான ஆளென்று
கரம் கோர்த்துப் பண்பாடும்

எட்டி நின்ற சமூகம் உன்
இடம் தேடி ஓடி வரும்
பட்டி தொட்டி எல்லாம் உன்
பாத்திரத்தில் ஆசைப்படும்
கெட்டிக்காரி தான் என்று
கிரீடங்கள் உனக்கு சூடும்
தட்டிக் கொடுத்துன்னை
தலை மேலே தூக்கி வைக்கும்

சவாலுக்கு முகம் கொடுத்து
சாதித்தாய் என்று சொல்லும்
வரலாற்றை மாற்றி
வரைந்தவன் நீ என்று சொல்லும்
துணிந்ததால்தான் வென்றாய் என்று
துதி வேறு நூறு பாடும்
துல்லியமாய் உன் நகர்வை
தொடர்ந்து கூர்ந்து பார்க்கும் நாளும்

தோற்று விட்டால் போதும் போதும்
தூற்றத் தொடங்கி விடும்
வாய்க்கு வந்த மாதிரியாய்
வசைமாரி பொழிந்து தள்ளும்
ஆழமறியாமல் போய்
அகப்பட்டாய் என்று சொல்லும்
தானம் தெரியாமல் போய்
தடம் புரண்டாய் என்று சொல்லும்

இயலாத வேலை எல்லாம்
ஏன் உனக்கு என்று சொல்லும்
எடுத் தெறிந்து வார்த்தைகளால்
கொல்லாமல் உன்னை கொல்லும்
படித்தறிந்த கூட்டம் கூட
பண்பின்றி நடந்து கொள்ளும்
பாதையிலும் பந்தியிலும்
படி இறக்கிப் பேசித் தள்ளும்

தொடங்கிடும் போதே
தோற்பது தெரியும் என்றும்
தொடர்பில்லா முயற்சி இதை
தொடர்வது கடினம் என்றும்
எதிர் மறை கருத்தைத்தான்
எங்கெங்கும்  வலி யுறுத்தும்
இதயத்தில் வலிகள் வந்து
இரத்தத்தை உறைய வைக்கும்

உன்னை விட முட்டாள்
உலகத்தில் இல்லை என்றும்
உழைக்க வழி தெரியாத
ஊதாரிக் கட்டை என்றும்
எண்ணியதைச் செய்யப் போய்
ஏமாந்து விட்டாய் என்றும்
ஏகும் இடமெல்லாம்
இதை விரைந்து
விரைந்து சொல்லும்

**றம்ஸானா ஸமீல்**



# சின்னம்மை (Chicken Pox) நோயும் நிவாரணமும்

Dr. **ஜலீலா முஸம்மில்** (MBBS/SL)
வைத்திய அதிகாரி
ஏறாவூர் ஆதார வைத்தியசாலை
ஏறாவூர்

கோடை காலத்தில் வெகுவாக பாதிக்கின்ற ஒரு நோய்தான் அம்மை நோயாகும்.

அதிலும் குறிப்பாகச்சின்னம்மை (Chicken pox) நோய் அதிதீவிரத் தொற்றுநோய் என்பதால் அதிக அளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

அம்மை நோய் பற்றிய விபரங்களையும் அதற்கான நிவாரணத்தையும் அறிந்து கொள்ளுதல் சமகாலத்தில் அத்தியாவசியமான ஒரு விடயமாகும். கோடைகால நோயான அம்மை நோய் அம்மாள் என்றும் அழைக்கப்படுவதுண்டு. வைரஸ் பாதிப்பான இந்த நோய் பற்றி அறிந்து கொள்வோம் வாருங்கள்.

தற்போது நம் நாட்டில் ஒரு சில இடங்களில் கோடை மழை பெய்து வருகிறது. வெயில், மழை கலந்த சீதோஷ்ண நிலை தற்போது நிலவுவதால் வைரஸ்கள் வேகமாகப் பெருகி நோய்களைப் பரப்பி வருகின்றன. சளி, காய்ச்சல், கண் நோய் தொடங்கி அம்மை உள்ளிட்ட பெரிய நோய்கள் வரை வைரஸ்களால் ஏற்படுகின்றன. வைரஸ் கிருமிகள் மிகவும் நுண்மையானவை. அவற்றின் ஆன்டிஜன்கள் அடிக்கடி மாற்றம் அடைவது, புதிய அவதாரம் எடுப்பது போன்றது. இக்காரணத்தால் வைரஸ்களுக்குத் தடுப்பூசி கண்டு பிடிப்பது சவாலாக உள்ளது. நம் நாடு வெப்பவலய நாடாக இருப்பதால் இங்கு அம்மை நோய் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது.

'அம்மை நோய் தெய்வ குற்றத்தால் வருவது' என்ற நம்பிக்கை இன்னும் சில சமூகங்களில் இருக்கிறது. அம்மை வந்தால் குளிக்கக்கூடாது, அசைவம் சாப்பிடக் கூடாது என எண்ணற்ற தவறான நம் பிக்கைகள், பழக்கவழக்கங்கள் கடைப்பிடிக்கப் படுகின்றன. உண்மையில் இது தெய்வ குற்றத்தால் ஏற்படுவது



இல்லை. வைரஸ் கிருமியின் வரவால் ஏற்படுகிறது.ஒரு காலத்தில் உலகம் முழுவதும் பெரியம்மை நோயால் மக்கள் கொத்துக் கொத்தாக உயிரிழந்தனர். பெரியம்மைக்குத்தடுப்பூசி வந்த பிறகு அது முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது. தற்போது பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்துவது சிக்கன் பொக்ஸ் (Chickenpox) எனப்படும் சின்னம்மை. இது ஒரு தொற்று நோய். யாருக்கு வேண்டுமானாலும் பரவலாம்.

## காரணி......................

சின்னம்மை வருவதற்கு காரணம் வெரிசெல்லா ஸோஸ்டர் (Varicella Zoster) என்கிற வைரஸ்தான்.

## பரவல்......................

இது, காற்று மூலமாக, ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவும். கோடைக்காலத்தில் இது பரவுவதற்கான சூழல் உள்ளதால், அதிக அளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பெரும்பாலும், குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும்தான் சின்னம்மை வருகிறது. 5 முதல் 10 நாட்கள் வரை உடலில் தாக் கத்தை ஏற்படுத்தும். ஒரு மனிதரிடம் இருந்து இன்னொரு மனிதருக்கு இருமல், சளி, உமிழ் நீர், தும்மல் வழியாக இந்த வைரஸ் பரவுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

நோயாளியின் அம்மைக் கொப்புளங்களிலும் சளியிலும் இந்த நோய்க் கிருமிகள் இருக்கும். அம்மைக் கொப்புளங்கள் உடைந்து நீர் வெளியேறும்போது இந்த வைரஸ் கிருமிகள் மற்றவர்களுக்கும் தொற்றிக்கொள்ளும். குறிப்பாக, நோயாளியோடு நெருக்கமாகப் பழகுபவர்களுக்குச் சின்னம்மை நோய் இந்த வழியில் பரவுகிறது. அம்மை வந்தவர்களுக்கு ஏற்பட்ட புண்களை இன்னொருவர் தொடுவதன் மூலமும் வைரஸ் தொற்று ஏற்படலாம். நோயாளியின் சளியில் இந்த வைரஸ் கிருமிகள் வெளியேறும்போது, காற்று மூலம் பிறருக்குப் பரவுகிறது. அடுத்து, நோயாளி பயன்படுத்திய உடைகள், உணவுத்தட்டுகள், போர்வை, துண்டு போன்றவற்றின் மூலமும் இந்த நோய் அடுத்தவர்களுக்குப் பரவலாம். இதனால்தான் அம்மை நோயாளிகளைத் தனிமைப்படுத்தி வைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

சின்னம்மை நோய், குழந்தை முதல் பெரியவர்கள் அனைவரையும் பாதிக்கும். என்றாலும் பத்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைத் தாக்குவது இதன் இயல்பு.

அதிலும் குறிப்பாக மக்கள் அதிகமாக வாழும் இடங்கள், நெரிசல் மிகுந்த இடங்கள், அசுத்தம் நிறைந்த இடங்கள், குடிசைப் பகுதிகள், விடுதிகள் போன்ற இடங்களில் வசிப்போருக்கும், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் இந்த நோய் விரைவில் பரவிவிடும். குடும்பத்தில் ஒருவருக்கு இந்த நோய் வந்தால், மற்றவர்களுக்கும் பரவ அதிக வாய்ப்புண்டு.

## அறிகுறிகள்.................

வெரிசெல்லா ஸொஸ்ட்டர் வைரஸ் உடலுக்குள் புகுந்த 1-3 வாரத்தில் தனது தாக்கத்தைக் காட்டும். ரத்தத்தில் வைரஸ் கலந்தவுடன் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பொதுவாக, பலருக்கும் சுவாசம் மூலமாகத்தான் இந்த வைரஸ் முதலில் பரவுகிறது. தீவிரமான காய்ச்சல் இருக்கும். 102 டிகிரி ஃபரனைட் வரையிலும்கூட காய்ச்சல் ஏற்படலாம். இது, தொண்டை, நுரையீரல் மற்றும் தோலில் புண்களை ஏற்படுத்தும். வழக்கமாக முதுகு, வயிறு போன்ற பகுதிகளில் சின்னம்மை புண்கள் ஏற்படும்.

முதலில் சாதாரணத் தடுமக் காய்ச்சல் போலத்தான் நோய் தொடங்கும். இரண்டாம் நாளில் உடல்வலி, தலைவலி, சோர்வு அதிகமாகும். காய்ச்சல் கடுமையாகும். உடலில் அரிப்பு, நமைச்சல், எரிச்சல் ஏற்படும். வாயிலும் நாக்கிலும் சிறு கொப்புளங்கள் தெரியும். மார்பிலும் முதுகிலும் சிவப்பு நிறத்தடிப்புகள் தோன்றும். அடுத்த 24 மணி நேரத்தில் இவை எல்லாமே நீர் கோத்த கொப்புளங்களாக மாறி விடும்.

சின்னம்மைக் கொப்புளங்கள் முகம், மார்பு, வயிறு, முதுகு, அக்குள் போன்ற பகுதிகளில் மிக நெருக்கமாகவும் அதிகமாகவும் காணப்படும். முன் கை மற்றும் முன் கால்களில் மிகப் பரவலாகவும் எண்ணிக்கையில் குறைந்தும் தெரியும். இது சின்னம்மைக்கே உரிய முக்கியத் தடயமாகும்.

வழக்கமாக இந்த நோய் தொடங்கிய ஏழாம் நாளில் காய்ச்சல் குறையும். அடுத்த நான்கு நாட்களில் கொப்புளங்கள் சுருங்கி, பொருக்குகள் உதிரும். அம்மைத் தழும்புகள் சில மாதங்களில் சிறிது சிறிதாக மறைந்துவிடும். ஒருமுறை சின்னம்மை வந்து குணமானவருக்கு, அவரது உடலில் இந்த நோய்க்கான எதிர்ப்பு அணுக்கள் உருவாகிவிடுவதால், ஆயுள் முழுவதும் அவருக்கு இந்த நோய் மீண்டும் வராது.

## அதிக பாதிப்பு ஏற்படும் நபர்கள்...................



குழந்தைகளைப் பொறுத்தவரை சின்னம்மை வந்தால் பெரும்பாலும் எந்த சிகிச்சையும் தேவைப்படாது. சில நாள்களில் தானாகவே சரியாகி விடும். ஆனால், முதியவர்களுக்கு சின்னம்மை சில நேரங்களில் கடுமையான விளைவுகளை ஏற் படுத்தும். எனவே, சின்னம்மை வந்த முதல் இரண்டு நாட் களுக்குள் மருத்துவரை அணுகி அன்ட்டிவைரல் மருந்துகளைச் சாப்பிட்டால், அம்மை நோயின் தீவிரம் குறையும். முதியவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும். இதனால், வெரிசெல்லா வைரஸ் நரம்பியல் மண்டலத்தைத் தாக்க வாய்ப்பு இருக்கிறது. மூளைக் காய்ச்சல், நிமோனியா மற்றும் சிறு மூளைப் பாதிப்புகள் ஏற் படலாம். எனவே, வயதானவர்க ளுக்கு அம்மை நோய் வந்தால் அலட்சியப்படுத்தக் கூடாது.

## நோயுற்ற காலத்தில் என்ன செய்ய வேண்டும்?.

பொதுவாக, அம்மைப் புண் களில் இருந்து நீர் வடியும். சிலருக்கு, இந்த புண்களில் பக்டீரியா தொற்று ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, அம்மை நோய் வந்தால் தனி அறையில் இருப்பதுதான் நல்லது. அம்மை காரணமாக உடலில் வெப்பம் அதிகமாக இருக்கும் என்பதால், குளிர்ச்சி நிறைந்த அறையில், புண்கள் ஆறி உதிரும் வரை இருப்பது சிறந்தது. நமது முன்னோர்கள் வேப்பிலையைப்



பரப்பி அதன் மேல் அம்மையால் பாதிக்கப்பட்டவர்களைப் படுக்க வைப்பார்கள். வேப்பிலை ஒரு கிருமிநாசினி என்பதால், அம் மைப் புண்களுக்கு மிகவும் நல்லது. ஆனால், சுத்தமாக இல்லாத வேப்பி லையின் மேற் புறத்தில் ஏதாவது கிருமிகள், தொற்றுகள் இருந்தால் அதன் மேல் படுக்கும் போது அம்மைப் புண்கள் பெரிதாகி விடும் வாய்ப்பும் உண்டு.

## உணவில் கவனம்.........

அம்மை நோய் ஏற்பட்டால் நீர்ச் சத்து நிறைந்த உணவுகளை நிறைய எடுத்துக்கொள்ள வேண்டும். எந்த உணவை வேண்டுமானாலும் சாப்பிடலாம். ஆனால், வீட்டில் சுத்தமாகச் சமைத்ததாக இருக்க வேண்டும். உணவில் காரம் மற் றும் எண்ணெய் குறைவாக இருப் பதை உறுதிசெய்துகொண்டு சாப் பிடலாம்.

அம்மை நோயாளிகள் அசைவம் சாப்பிடக் கூடாது என்றும் பத்தியம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கூறுவார்கள். இதிலும் உண்மையில்லை. இவர்களுக்கான உணவில் எந்தக் கட்டுப்பாடும் தேவையில்லை. எல்லா உணவையும் வழக்கம் போல் சாப்பிடலாம். பொதுவாக அம்மை நோயாளியின் உடலில் நீரிழப்பு சற்று அதிகமாக இருக்கும் என்பதால் பால், நீர் மோர், கரும்புச்சாறு, இளநீர், ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை உள்ளிட்ட பழச்சாறுகள், அரிசிக் கஞ்சி, ஜவ்வரிசிக்கஞ்சி, சத்து மாவு, கூழ், குளுகோஸ், சத்துப் பானங்கள், உப்புச் சர்க்கரைக் கரைசல் போன்ற நீர்ச்சத்து நிறைந்துள்ள உணவை அதிகப் படுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன் வைட்டமின் ஏ சத்து நிறைந்த கரட், பப்பாளி, தக்காளி, பசலைக்கீரை போன்றவற்றையும் சாப்பிட வேண்டும்.

## குளிப்பது அனுமதிக்கப் பட்டுள்ளதா?.............

கிராமப்புறங்களில் பலர் அம்மை வந்தால் குளிக்கவிடுவது இல்லை. அம்மை நோயாளிகள் உடலில் கொப்புளங்கள் அனைத்தும் மறைந்த பிறகுதான் குளிக்க வேண்டும் என்று சொல்வார்கள். இதுவும் தவறு. அம்மையால் பாதிக்கப்பட்டவர் தினமும் குளிக்கலாம். சோப் பயன்படுத்தாமல் குளிக்கலாம். நிறைய நாட்கள் குளிக்காமல் இருந்தால், சில நேரங்களில் தொற்றுப் பாதிப்புகளால் நோய் பெரிதாகிவிடும் வாய்ப்பு உண்டு.

வெதுவெதுப்பான உப்புநீரைக் கொண்டு காலை, மாலை இரண்டு வேளை வாயைக் கொப்பளிக்கலாம். முகத்தையும் கண்களையும் அடிக்கடி சுத்தமான தண்ணீரில் சுத்தம் செய்துகொள்ளலாம். அம்மை வந்த சமயங்களில் குளிக்காவிட்டாலும் அவசியம் சுத்தமான பருத்தித் துணியாலான துவாலையைத் தண்ணீரில் நனைத்துப் பிழிந்து உடலைத் துடைத்துக் கொள்ளலாம்.

## என்ன சிகிச்சை?..........

சின்னம்மையைப் பொறுத்த வரை பெரும்பாலும் சிகிச்சை தேவைப்படாது. ஓய்வே போதுமானது. ஒருமுறை ஒருவருக்கு சின்னம்மை வந்தால், அதன் பின்னர் அவரது வாழ்நாளில் மீண்டும் வருவதற்கான வாய்ப்பு இல்லை.

ஏனெனில், சின்னம்மையை ஏற்படுத்தும் வெரிசில்லா வைரஸுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை உடல் தானாகவே உருவாக்கிக்கொள்ளும்.

ஆனால் நீர்ப்பீடணம் குறைவான நபர்களில் மீண்டும் அது உடலின் குறிப்பிட்ட இடங்களில் சிலவேளைகளில் ஏற்படக் கூடும். இதனை நரம்பம்மாள் என்று அழைப்பார்கள்.

கிராமப்புறங்களில், ஏன் நகர்ப் புறங்களில்கூட அம்மை நோய் ஏற்பட்டால் மருந்து, மாத்திரை சாப்பிடக் கூடாது என்ற எண்ணம் மக்கள் மனதில் வேரூன்றி உள்ளது. அம்மைக் கொப்புளங்களில் வேப் பிலை அல்லது மஞ்சளை அரைத்துப் பூசுவது ஒன்றுதான் மருந்து என்று சொல்லி, அதை மட்டுமே தின மும் அரைத்துப் பூசுவார்கள். வேப்பிலைக்கும் மஞ்சளுக்கும் நோய் எதிர்ப்புச் சக்தி உண்டு. ஆனாலும் இந்த நோய்க்கான வைரஸ் கிருமிகளை ஒழிக்க இவை மட்டுமே போதாது.

சின்னம்மைக்குப் பல காலமாகச் சிகிச்சை இல்லாமல் இருந்தது உண்மைதான். ஆனால், இப்போது இந்த நோய்க்கு அலோபதி மருத் துவத்தில் சிறந்த சிகிச்சைகள் உள் ளன. 'ஏசைக்ளோவிர்' எனும் மாத்திரையை மருத்துவரின் ஆலோ சனையின்பேரில் தொடர்ந்து ஐந்து நாட்களுக்குச் சாப்பிட்டால் விரைவிலேயே சின்னம்மை குண மாகிவிடும். அத்துடன் 'ஏசைக் ளோவிர்' களிம்பை அம்மைக் கொப் புளங்களில் தினமும் தடவினால் அரிப்பு, எரிச்சல், நமைச்சல் போன்ற தொல்லைகள் கட்டுப்படும்.

அத்துடன் வலி நிவாரணி, அரிப்பு நிவாரணி மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

வீட்டில் யாராவது ஒருவருக்கு அம்மை இருந்தால், வீட்டில் உள்ள மற்றவர்களுக்கும் பரவ வாய்ப்பு இருக்கிறது. ஒருவருக்கு அம்மை வந்த அடுத்த ஒரு வாரத்தில் இருந்து மூன்று வாரங்களுக்குள் வீட்டில் இருப்பவர்களுக்கும் அம்மை வரலாம்.

இதைத் தடுக்க வீட்டில் உள்ள மற்றவர்கள் சின்னம்மைக்கான தடுப்பூசிகளைப் போட்டுக் கொள் வது சிறந்தது.

18 மாதங்களைக் கடந்த குழந் தைகளாக இருந்தால், ஒரு டோஸ் தடுப்பூசியும், பெரியவர்கள் ஒரு மாத இடைவெளியில் இரண்டு டோஸ் தடுப்பூசிகளும் போட்டுக் கொள்ள வேண்டும்.

## பாதிப்புகள்................

சின்னம்மை நோய் குழந்தை களைத் தீவிரமாகத் தாக்கினால், நியுமோனியா, மூளைக்காய்ச்சல், எலும்பு சீழ்மூட்டழற்சி, இதயத் தசை அழற்சி, சிறுநீரக அழற்சி போன்ற கடுமையான பாதிப்புகள் ஏற்படலாம். அப்போது குழந்தை யின் உயிருக்கு ஆபத்து வரலாம். கர்ப்பிணிகளுக்குச் சின்னம்மை வரு மானால், கருவில் வளரும் சிசுவைப் பாதித்துப் பிறவி ஊனத்தை உண்



டாக்கலாம். இவை எல்லாமே சின்னம்மை நோய் உள்ளவருக்கு உடனடியாகத் தோன்றுகிற சிக்கல்கள்.

அம்மை வந்தால் ஏற்படும் மிகப்பெரிய சோதனையே தழும்புகள்தான். வேலைக்குச் செல்லும் பலர் அம்மைத் தழும்புகளால் மன அழுத்தத்துக்கு ஆளாகின்றனர். அம்மைத் தழும்புகள் முற்றிலும் நீங்க ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை ஆகும். அம்மைத் தழும்புகளை நீக்கப் பிரத்யேக சிகிச்சைகள் இல்லை. எனவே, முடிந்த வரை அம்மை வராமல் தடுப்பதுதான் சிறந்த வழி.

**முற்காப்பு நடவடிக்கைகள்..**

சுய சுத்தம் பேணுவதும் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்வதும் சின்னம்மையைத் தடுக்க உதவும் சிறந்த வழிகள்.

அம்மை நோய் வந்துள்ளவர்களுடன் நெருங்கிப் பழகுவதைத் தவிர்க்க வேண்டும்.

அம்மை நோயாளிகளை வீட்டில் தனிமைப்படுத்துவது நல்லது.

இந்த நோயாளிகள் பயன் படுத்திய பொருட்களை மற்றவர்கள் பயன்படுத்தக் கூடாது.

சின்னம்மை வராமல் தடுத்துக் கொள்ள, இப்போது தடுப்பூசி உள்ளது. 'சின்னம்மை தடுப்பூசி' (Chicken pox vaccine) என்று அதற்குப் பெயர்.


குழந்தைக்கு 15 மாதங்கள் முடிந்ததும் முதல் தவணைத் தடுப்பூசியும், 5 வயதில் இரண்டாம் தவணைத் தடுப்பூசியும் போட வேண்டும்.

ஆரம்பத்திலேயே இத்தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளாதவர்கள் 13 வயதுக்குள் இதைப் போடுவதாக இருந்தால், மூன்று மாத இடைவெளியில் இரண்டு தவணைகள் போட்டுக்கொள்ளலாம். 13 வயதுக்கு மேல் ஆகி விட்டது என்றால், இரண்டு மாத இடைவெளியில் இரண்டு தவணைகள் போட்டுக் கொள்ளவேண்டும்.

வீட்டில், அடுத்த வீட்டில் அல்லது அலுவலகத்தில் மிகவும் நெருங் கிப் பழகும் ஒருவருக்குச் சின்னம்மை நோய் வந்து விட்டதென்றால், அவருக்கு நோய் தொடங்கிய மூன்றிலிருந்து ஐந்து நாட்களுக்குள் அவரோடு பழகுகிற மற்றவர்கள் இந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

ஒரு தவணையை மட்டும் போட்டுக் கொண்டு, அடுத்த தவணையைப் போடாமல் விட்டவர்கள் மீண்டும் ஒரு தவணை மட்டும் போட்டுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களுக்குச் சின்னம்மை வராது. இங்குக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று உள்ளது. அதாவது சின்னம்மை நோய் வந்த பிறகு, இந்தத் தடுப்பூசியைப் போட்டால் பலனில்லை. எனவே வருமுன் காப்போம் வளமாக நலமாக வாழ்வோம்.

நன்றி



# ஆற்றோரம்...

குருவிகளின் இன்னிசை
குதூகலிக்கச் செய்யும்..
பச்சையத்தின் செழுமை
பசுமையை ஊட்டும்..

பாய்விரித்திருக்கும் நீரில்
பரிதியொளி மின்னும்..
மேகங்கள் திரண்டு
மோகனத்தைப் பாய்ச்சும்..

அமைதியான இராகங்கள்
அகத்தினைத் தட்டும்..
ஆங்கே இருந்துவிடும்
ஆவலைத் தூண்டும்..

வலிகள் குறைத்து
மனதைத் தேற்றும்..
உளிகள் போலே
செதுக்கி மகிழும்..

இயற்கையின் கொடைக்கு
ஈடிணை ஏது..
இதயத்தின் குளிர்ச்சிக்கு
இதுவல்லவா காட்சி...

**நுஸ்ரா லியாகத் அலி**
(என்.நூர்)
தர்கா நகர்.

# காலத்தின் வடுவில்

ஆதிகால மனிதன் அடுப்பங் கரையில்
விறகு மூட்டி எரியும்
நெருப்புச் சூட்டில்
கஞ்சி வடித்து உண்டு மகிழ்ந்து
காத்திருப்புகள் இன்றியே
காலம் கழித்தான்

அடிப்படை வசதிகள்
அரிதாகக் கிடைக்க
இருட்டில் நிலவின் ஒளியில் கூடி
இன்னல் களைந்து இன்பம் கண்டு/
இதயச் சுமைகளை
இறக்கி மகிழ்ந்தான்

அறிவு வளர்ச்சியின்
நாகரீகத் தாக்கம்
அடிக்கொரு தடவை
புதுமைகள் படைக்க
ஆரோக்கியம் தந்து
ஆயுளை நீடித்த
வேலைகள் எல்லாம் சூனியமாகின

காலத்தின் சுழற்சியில்
சிக்குண்ட மனிதன்
காரியங்கள் அனைத்தையும்
சுலபமாக்கிக் கொள்ள
வியர்வை சிந்தும் நிலையை
உதறி தானே நோயில்
வீழ்ந்தும் விட்டான்

**மாஹிரா ஹமீட் அஸ்ஹர்**
கம்பளை

# பெண்ணவளின் பாவநிலை

அகிலமே அசைந்தாடும்
பெண்மயிலாள் அவள் சுமக்கும்
சுமைகள் கொஞ்ச நஞ்சமா
தாயணைப்பில் சேயாக
கரம் தொட்டவனுக்கு பாயாகி
சேயருகில் தாயாகி
முப்பரிமாணம் கொண்டவள்

தாய்வீட்டு தாரகையாய்
புற்தரையில் பூப்பாதம் பதித்து
தந்தையின் தேவதையாய்
வரம் கொண்டவள்
மறுவீட்டு மணம் கொண்டவள்
எத்தரையையும் பாராமல் நித்தமும்
கடமையை கண்ணாய் கொண்டவள்

கருவை தன்னில் சுமக்கும்
உன்னத தாய்மைக்கு உரித்தானவள்
ஆசைகள் ஆயிரம் இருந்தாலும்
அசைவுக்கு தோதாக அடக்கும்
ஆற்றல் பெற்றவள்

இயற்கை சீற்றம் பெற்றாலும்
செயற்கையின் பழிகளை சுமப்பவள்
பெண்ணாய் பிறந்து விட்டாயே
என்று பிறந்ததும் கேட்கும்
ஏளனப் பேச்சுகளும்

குமரியாய் வளர்ந்ததும் பாயும்
வெறிப்பிடித்த பார்வைகளும்
சீதனம் கொடுக்க வழியில்லா
நிலையில் முதிர்க்கன்னி என்றும்
புகுந்த வீட்டிலோ தரித்தரம் என்ற
புனைப் பெயருக்கும்
பாசத்தை நாடி ஆசையாய்
கொண்ட மணவாழ்க்கை
பிழைத்திட வாழாவெட்டி என்றும்
கரம்தொட்டவன் காலனின் ஏற்பை
பெற்றதும் விதவை என்றும்

எத்தனை எத்தனை
பெயர்களை நித்தம் சுமப்பது
சுமையெனப் பாராது கருவில்
சுமந்த பாவத்திற்கு இன்று
தெருவில் தூக்கி எறியப்படுகிறாள்

பிற்காலத்தில் என்ன நடக்கும்
என்று கணிக்கும் வல்லமை
பெற்றவளை உரைக்கும்
பெண் புத்தி பின் புத்தி என்ற
பிழையான சித்தரிப்புக்குள்
சிக்கிவிட்டாள்

உன்னை சுமந்தவள் மட்டும் தாயல்ல
பெண்ணாய் பிறப்பெடுத்த
ஒவ்வொரு உயிரும் தாய்மைக்கு
தகுதியானவளே!

வாழ்த்தாத போதிலும் தூற்றாது
கொஞ்சம் அவளை வாழவிடு
அடக்கி ஆள நினைக்காமல் அவள்
ஆசைக்கு கொஞ்சம் இடம் கொடு

**ஷியாஸ்னா பைஸல்**

# பைந்தமிழ்ச் செம்மல்
# நிர்மலா சிவராசசிங்கம்

## ..................ஆளுமை அறிமுகம்...................

'தமிழ் மணிப் புலவர்' பட்டம் பெற்ற இவரை தன்னைக் கவியுலகில் 'பைந்தமிழ்ச் செம்மல்' நிர்மலா சிவராசசிங்கம் என்று அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறார். புலம் பெயர்ந்து சுவிற்சலாந்தில் வாழ்ந்து வரும் அவர் தமிழ்மொழியின் கொண்ட பற்றுதலால் தமிழ் மொழியை புலம் பெயர்ந்த தேசத்திலும் கற்பித்துக் கொண்டு இருக் கிறார்.

தமிழ் மொழி இலக்கியத்தில் பற்று வருவதற்கு காரணம் தனது பெற்றோர் தான் என்று கூறும் இவர், அவர்கள் தமிழ்த் துறையில் பயணிக்க எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுத்து இருந்தார்கள் என்பதையும் மகிழ்வாக பதிவு செய்கிறார். தற்போது அவருடைய இலக்கிய பயணத்துக்கு உற்சா கம் தருபவர்கள் தனது கணவனும் பிள்ளைகளும் என்று குறிப்பிடுகிறார்.

பிறப்பிடம் இலங்கையில் வடமராட்சி அல்வாய். ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக்கல்வி வரை வெள்ளவத்தை புனித கிளயர்ஸ் மகளிர் மகா வித்தியாலயத்திலும். பட்டப் படிப்பை யாழ் பல்கலைக்கழகத்தில் கற்று உள்ளார். தொடர்ந்து ஆங்கில ஆசிரியராக



வடமராட்சி யில் உள்ள யாழ்/ ஆழிய வளை கலவன் பாடசாலையிலும் பட்டதாரி. ஆசிரியராக கிளிநொச்சி கனிஸ்ட மகா வித்தியாலயத்திலும் பளை மகா வித்தியாலயத்திலும் கற்பித் துள்ளார்.

சுவிற்சலாந்தில் ஆசிரியர் களுக்கான மேற்படிப்பு (தமிழ் மொழி கற்பிப்பதற்காக) Pädagogische Hochschule Bern இல் கற்ற பின் தான் தமிழ் ஆசிரியராக கடமை புரிந்து வருகிறார் ,

மரபு இலக்கணத்தைப் பைந் தமிழரசு பாவலர் மா. வரதராசன் அவர்களிடம் கற்றேன் என்று கூறு வதில் பெருமையடைகிறார்.

**சமூக சேவைகள் -**

1. சுவிற்சலாந்தில் சமூகப் பணியில் 10 வருடமாக Wynau Einwohnergemeinde யில் பணி ஆற்றி உள்ளார். புலம் பெயர்ந்து வந்ததும் மொழி தெரியாமல் இருந்த தமிழர்களுக்கு மொழி பெயர்ப்பாளராக இருந்திருக் கிறார்.
2. Instagram என்ற வலைதளத்தில் tamil.teacher_s.nirmala என்ற பெயரில் தமிழ் மொழியை மாணவர்களுக்கு கற்பிக்கின்றார்
3. இந்தியாவிலும் இலங்கையிலும் கற்கும் மாணவர்களுக்கு மேற் படிப்பு தொடர ஆதரவு அளித்து வருகின்றார்
4. சுவிற்சலாந்து நாட்டில் முதல் தமிழ்மணிப் புலவர் பட்டம் பெற்ற பின். தமிழ்மணிப் புலவர் பட்டம் பெறும் கற்கை நெறிக்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் சார்பாக பொறுப்பாளர் ஆக 15 வருடங்கள் கடமை ஆற்றி யுள்ளார். அதன் மூலம் சுவிற் சலாந்தில் 25 மாணவர்கள் தமிழ் மணிப் புலவர் பட்டம் பெற்று பயனடைந்து உள்ளார்கள்



5. சுவிற்சலாந்தில் வாழும் சில குடும் பங்களுக்கு வரவு செலவு திட்டத்துக்கு ஏற்ப வாழும் முறைமைக்கு ஆலோசனை வழங்கி வருகிறார் .
6. மாணவர்களுக்கு ஆக்கங்கள் தமிழில் எழுதி யும் அவர்கள் எழுது வதற்கும், (கட்டுரைகள்.

வாழ்த்து மடல்கள், மேடைப் பேச்சு) ஒத்துழைப்பு வழங்குகின்றார்

**இலட்சியம்**

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் இன்னும் பல நூல்கள் எழுதிப் படைக்க வேண் டும் என்று விரும்புகிறார் தனது இலக்கிய படைப்புகளுக்கு ஆதரவு தந்து கொண்டு இருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றார்

**இதுவரை இலக்கிய உலகில் எழுதிய நூல்கள்**

**சிறுவர் நூல்கள் .**

1. எழில்மிகு பூக்கள்
2. உல்லாசப்பறவைகள்
3. ஹைக்கூ நூல் - ஓடை நிலா

   **மரபு கவிதை நூல்கள் -**
4. அந்தமிழ் அறுபது .
5. எழில் விருத்தம்
6. சிந்து பாடல்கள் - சிந்து கவிச் சாரல்
7. வண்ணப் பாடல்கள் -பொன் வண்ணம்

ஆசிரியர்களுக்கான மேற்படிப்பு (தமிழ்மொழி கற்பிப்பதற்காக) Päd-agogische Hochschule Bern இல் எடுக்கப்பட்ட படம்





பாடசாலை ஆண்டு விழா

8. இந்த வருடம் வெளியீடு காண இருக்கும் நூல் .சிலேடை வெண்பா 100- சிலேடைச் செல்வம்

**நிலுவையில் இருக்கும் நூல்கள் -**

கலிப்பா வகைப் பாடல்கள்

**மரபு கவிதையில் தேர்வு எழுதி கிடைத்த பட்டங்கள் -**

பைந்தமிழ்ச் செம்மல், ஆசுகவி , வண்ணத்தரசி, விரைகவிச் சுடர், பைந்தமிழ் ஆசான், சிந்திசைப் பாவலர் என்பனவாகும்.

இவரின் இலக்கியப் பயணம் வெற்றி கரமாக அமைய முத்தமிழ் கலசம் சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்



உல்லாசப்பறவைகள் நூல் வெளியீட்டின் போது



அந்தமிழ் நூல் வெளியீட்டின் போது ஏற்புரை



வண்ணப் பாடல்கள் - பொன் வண்ணம் நூல் வெளியீட்டின் போது



எழில்மிகு பூக்கள் நூல் வெளியீட்டு விழாவில் எடுத்த படம்



உல்லாசப்பறவைகள் நூல் வெளியீட்டின் போது



பாடசாலை ஆண்டு விழா



எழில்மிகு பூக்கள் நூல் வெளியீட்டு விழாவில் எடுத்த படம்


9 772719 252001
DEVI
A little bit of gold goes a long way in adding elegance.
DEVI JEWELLERS PRIVATE LTD
131 Sea Street, Colombo 11 | 0112395001-5 / 0713131131
devijewellers.lk devijewellers devi_jewellers